விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 03 வியாழக்கிழமை (19.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335




# முன்னாள் சிறுவர் போராளிகளுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சந்திப்பு

## பாடசாலையிலும் அவர்களுக்குப் பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையில் அம்பேபுஸ்ஸ மற்றும் பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாம்களில் இருந்து புனர்வாழ்வு பெற்று இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று வரும் விடுதலைப் புலிகளின் முன்னாள் சிறார் போராளிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்றுச் சந்தித்து உரையாடியுள்ளனர். (14 ஆம் பக்கம் பார்க்க)

## பொது வேட்பாளருக்கு கொள்கைரீதியாக ஆதரவு

### ★ ஐ.தே.க.-ஜே.வி.பி.இணக்கம் ★

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளருக்குக் கொள்கை ரீதியாக ஆதரவு வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் இணங்கியுள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளரைக் கொள்கை ரீதியாக ஆதரிப்பதற்கு ஜே.வி.பி. இணங்கியுள்ளது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரி மாதத்திற்கு முன்னர் மீள்குடியேற்றம் நிறைவுபெறும்

### ★ ஜோன் கோம்ஸ் நம்பிக்கை ★

(கொழும்பு)

வவுனியா நிவாரண முகாம்களிலுள்ள மக்கள் எதிர்வரும் ஜனவரி மாதத்திற்கு முன்னர் முழுமையாக மீள்குடியேற்றப்படுவர் என்ற நம்பிக்கை தமக்குள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் ஜோன் கோம்ஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அழைப்பினை ஏற்று 4 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்த அவர், வவுனியா நலன்புரி கிராமங்களுக்கு விஜயம் செய்த பின்னர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் துரிதகதியில் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம் மற்றும் முகாம்களிலுள்ள மக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பில் தாம் திருப்தியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸ் தெரிவித்தார்.

இதேவேளை (14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.அரச அதிகாரிகள் நாளை ஜனாதிபதியுடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் க.கணேஷ், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் பிரதேச செயலாளர்கள், உதவி அரச அதிபர்கள் நாளை மாலை 6 மணிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளனர்.

இச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெறவுள்ளது. இச் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக அனைவரும் இன்று காலை கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாக உள்ள நிலையில் யாழ். மாவட்ட அரச உயர் அதிகாரிகளை அழைத்து ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளமையானது பல்வேறு கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளது. (ச-5)

## வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தோர் குடத்தனை முகாமுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில், இராமாவில் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த வடமராட்சிக் கிழக்கைச் சொந்த இடமாகக் கொண்ட 142 குடும்பங்களைச் சேர்ந்த 465 பேர் நேற்றுக் குடத்தனை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில், வடமராட்சிக் கிழக்கைச் சொந்த இடமாகக் கொண்ட மிருசுவில் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 121 குடும்பங்களை சேர்ந்த 413 பேரும் கொடிகாமம் இராமாவில் முகாமிலிருந்து 21 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேரும் நேற்று குடத்தனை முகாமுக்கு மாற்றப்பட்டனர்.

இம் மக்கள் கட்டைக்காடு, தாழையடி உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதால் அங்கு மீள்குடியமர்வு நடவடிக்கைகள் ஆரம்பமாகும் வரை (14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண முகாம்களிலிருந்த அனைவரும் மீள்குடியேறினர்

### படைத் தலைமையகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் அனைவரும் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளதாகப் பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஒரு சில மாதங்களுக்கு முன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களிலிருந்து 825 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 280 பேர் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

குருநகர், (14 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசியல் சாசனத்தை ஒத்த தீர்வே இலங்கையில் பொருத்தமானது

### ஆனந்தசங்கரி அறிக்கை

(கொழும்பு)

ஒற்றையாட்சியின் கீழ் நிரந்தரத் தீர்வை ஒருபோதும் அடைய முடியாது என்பதைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நம்புவதால் இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வைக் காண்பதற்கு ஒரேயொரு மாற்றீடாக இந்திய அரசியல் சாசனத்தை ஏற்ற தீர்வு பொருத்தமானது எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

சிறுபான்மையின மக்கள் அரைநூற்றாண்டுக்கு மேலாக அனுபவித்து வரும் கஷ்டங்களுக்கு இதுவரை தற்காலிக நிவாரணமோ நிரந்தத் தீர்வோ கிட்டாமல் காலத்துக் காலம் நற்சிந்தனையுள்ள தலைவர்கள் நியாயபூர்வமாக மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்ந்து சில கடும் போக்காளர்களினால் முட்டுக்கட்டை போட்டு வந்தமையை கவனத்தில் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் அடிப்படைக் கொள்கையில் பாதிப்பு ஏற்படுவதை (14 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் விநியோகம் இன்று சீராகும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சகல பிரதேசங்களிலுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இன்றுமுதல் சீராகப் பெற்றோலைப் பெற்றுக் கொள்ள முடியும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளதாவது,

யாழ்.மாவட்டத்திற்கு ஏ-9 வீதியூடாக எடுத்து வரப்பட்ட பெற்றோல் நேற்று ஒவ்வொரு பிரதேசங்களிலுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட்டது.

அத்துடன் நேற்று வழங்கப்படாத சில எரிபொருள் நிரப்பு (14 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் பொருளாதாரத்தை மேம்படுத்த வடமாகாண அபிவிருத்தி வங்கி அவசியம்

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக வடக்கு மாகாண அபிவிருத்தி வங்கி அமைக்க வேண்டுமென யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மத்திய வங்கி ஆளுநர் மற்றும் வடக்கு மாகாணத்திலுள்ள 5மாவட்ட அரச அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளதாவது, வடக்கு மாகாண மக்களின் பொருளா தா ரத்தை கட்டியெழுப்பி அபிவிருத்தியை முன்னெடுப்பதற்காக வடக்குமாகாண அபிவிருத்தி வங்கி நிறுவப்பட வேண்டும்.

இதன் மூலம் வடக்கு மாகாணத்தில் கிடைக்கும் நிதி இங்கேயே அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும்.

ஆனால் தற்போது தனியார் வங்கிகள் பல யாழ்ப்பாணத்தில் தமது கிளைகளை விஸ்தரிக்கின்றன. ஆனால் வடக்கு மாகாணத்திற்கு தற்போது அவசியமானது வடக்கு மாகாண அபிவிருத்தி வங்கி.

இதன் மூலம் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த நலிந்த மக்களுக்கு நன்மை கிடைப்பதுடன், மாகாணத்தின் அபிவிருத்திக்கும் வழிசமைக் கும்.

இது போன்ற வங்கி ஏற்கனவே 6 மாகாணங்களில் தற்போதுள்ளன.

இதில் வடமேல் மாகாணம்- வயம்ப அபிவிருத்தி வங்கி, தென் மாகாணம்-ருகுணு அபிவிருத்தி வங்கி, மத்தியமாகாணம்- கண்டுரத்த அபிவிருத்தி வங்கி, சப்ரமுவமாகாணம் - சப்ரமுவ அபிவிருத்தி வங்கி, ஊவா மாகாணம்- ஊவாஅபிவிருத்தி வங்கி, வட மத்திய மாகாணம்-ரயறட்ட அபிவிருத்தி வங்கி என அமைக்கப்பட்டு சிறப்புற இயங்குகின்றமையையும் தங்க ளின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## இந்தியப் பேராசிரியரின் சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தமிழ் மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் இந்தியப் பேராசிரியர் முனைவர் பக்தவத்சல பாரதியின் சிறப்புரை இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'தமிழர் மரபியல்' எனும் விடயம் பற்றி சிறப்புரை இடம் பெறும். (ச)

## பேரா.வித்தியானந்தனின் உருவச்சிலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தரும், தமிழியலுக்கும், உயர்கல்விக்கும் மேலான பங்களிப்பை ஈந்த வருமான பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தனின் உருவச்சிலை திறப்புவிழா அவரின் பெயரில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து 10மணிக்கு நூல்க கேட்போர் கூடத்தில் நினைவுப் பேருரையும் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் மாணவனும், தமிழியல் அறிஞருமான பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவினால் 'யாழ்ப்பாணப்பண்பாடு மறந்தவையும், மறைந்தவையும்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார். (ச)

## ஓசீனிக் வீகிங் கப்பலில் இருந்த தமிழர் அனைவரும் தரையிறக்கம்

(கொழும்பு)

இந்தோனேசியா கடற்பரப்பில் தரித்து நின்ற அவுஸ்திரேலியாவின் சுங்கத்திணைக்களத்திற்கு சொந்தமான ஓசீனிக் வீகிங் கப்பலில் தங்கியிருந்த ஈழத்தமிழ் அகதிகள் அனைவரும் இந்தோனேசியாவில் இறக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, ஓசீனிக் வீகிங் கப்பலில் எஞ்சியிருந்த தமிழ் அகதிகள் 56 பேரும் நேற்று இந்தோனிசியாவில் தரையிறங்கியுள்ளனர். அவர்கள் அங்கிருந்து தஞ்சாங்பினாங் பகுதியில் உள்ள தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கப்பலில் இருந்து இறங்கிய 22 பேரும் இந்த முகாமில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே 41 அகதிகளை ஏற்றிக் கொண்டு மற்றுமொரு கப்பல் அவுஸ்திரேலியாவின் கடற்பரப்பை வந்தடைந்துள்ளதாக அவுஸ்திரேலியா கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடத்தில் அகதிகளை ஏற்றிக் கொண்டு அவுஸ்திரேலிய கடற்பரப்பை வந்தடைந்த 43 ஆவது கப்பல் இதுவாகும். (ச-5)

## அன்பு வாசகர்களே!

## உங்கள் வலம்புரியில் விவாத அரங்கு

வாசகர்களின் எண்ணங்களுக்கு வண்ணம் அமைக்கும் அரிய சந்தர்ப்பம். வாரந்தோறும் வாசிக்கவும் பங்குபற்றவும் தவறாதீர்கள்.

முதலாவது விவாத அரங்கில் :-

விவாதப் பொருள்:-

ஏழு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம்

| | |
|---|---|
| நியாயமானதும் அவசியமானதும் ஆகும். | அவசியமேயில்லை அதை நியாயப்படுத் தவும் முடியாது |

உங்கள் கருத்துக்களை எழுதி (புகைப்படத்துடன்)

விவாத அரங்கு 01
வலம்புரி
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

குறிப்பு:-

விவாதத்தில் கலந்து கொள்பவர்கள் தங்களது புகைப்படத் தையோ அல்லது சொந்தப் பெயரையோ பிரசுரிக்க விரும் பாவிடின் தங்கள் அடையாள அட்டையின் போட்டோப் பிர தியை அனுப்பி வைத்தல் வேண்டும்.

## தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட அதிபர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வில் தரம்-I ஏபி, ஐசி வகை II பாடசாலை அதிபர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமையும், வகை III பாடசாலை அதிபர்களுக்கு நாளை மறுதினம் சனிக்கிழமையும் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி 'பி' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் அத்தியா+வசிய பாடசா லை தகவல் படிவம் வழங்கல் மாணவர் அடை யாள அட்டையும் தேற்ற இடாப்பும் வழங்கல், பாடசாலை பௌதிக வள சேவைகள், முன்னுரிமை தொடர்பில் இறுதித்தீர்மானம் எடுத்தல், நலன்புரி நிலையங்களில் இருந்து வந்து பாடசாலைகளில் சேர்ந்த மாணவர்களின் தரவுகளை நிரல்படுத்துதல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி செயலமர்வில் அதிபர்களும் பொருத்தமான ஆசிரியர் ஒருவரும் தவறாது வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளதுடன், வரும்பொழுது 5 ஆண்டு அபிவிருத்தித்திட்டம் எஜபி 2010, நலன்புரி நிலைய மாணவர்கள் தொகை, பௌதிக வளதேவை முன்னுரிமைப் பட்டியல் போன்றவற்றை கொண்டுவருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பண்டத்தரிப்பு குடும்ப பாடசாலைகளில் கல்விகற்கும் 2009 கல்வி பொதுத்தராதர சாதாரணப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும் என மாதகல் சென். யோசப் மகாவித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (ச)


### வீடு, வளவு விற்பனைக்கு

5 பரப்பு காணியுடன் சலை வசதியும் கொண்ட வீடும் 5 பரப்புடைய வெறும் வளவும் விற்பனைக்கு உள்ளது. வாங்க விரும்புபவர்கள் நேரடியாகவோ தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

ஆர்(R). உருத்திரமூர்த்தி,
தாவளை லேன், வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை
T.P. No:021 3205257 (3943)

### தவறிவிட்டது

107/1, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை எனும் முகவரியுடைய பூச்சி மார்க்கண்டு (561763267V), மார்க்கண்டு ராசம்மா (617514591V), மார்க்கண்டு விஜயலோஜினி (897152371V) ஆகியோரது தேசிய அடையாள அட்டை மற்றும் ஆமி அடையாள அட்டை என்பன 12.11.2009 அன்று கொடிகாமம் பஸ்ஸில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

183, 300 வீட்டுத்திட்டம்,
நாவற்குழி, கைதடி.
T.P.:077 9551280 (3948)




நூலக மாதத்தினை முன்னிட்டு நாவாந்துறை றோ.க. வித்தியாலய தரம் 8மாணவர்களுக்காக நடத்தப்பட்ட வாசிப்பு முகாமில் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் மாணவர்களையும் படத்தில் காணலாம்.

## ஜெனரல் சரத் பொன்சேகாவை

# 3 தினங்களுக்குள் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இருந்து வெளியேற உத்தரவு

(கொழும்பு)

கூட்டுப்படைத் தலைமை அதிகாரி பதவியில் இருந்து விலகிக்கொண்ட ஜெனரல் சரத்பென்சேகாவை 3 தினங்களுக்குள் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இருந்து வெளியேறுமாறு பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

ஜெனரல் சரத்பொன்சேகா கடந்த 12திகதி தனது ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்திருப்பதுடன் கடந்த 16ஆம் திகதி இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெறும் அதிகாரிகள் மாற்று இருப்பிடம் ஒன்றைக் தேடிக்கொள்ளும் வரை உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்கியி ருக்க இடமளிப்பது வழமை என்ற போதிலும் சரத் பொன்சேகாவை வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


இதற்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சரத்பொன்சேகா தனக்குப் பொருத்தமான வீடு ஒன்றை அடையாளம் காணும் வரை உத்தியோக பூர்வ இல் லத்தில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# புதிய ஆயிரம் ரூபா நாணயத்தாள் வெளியீடு

(கொழும்பு)

நிதியமைச்சரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய ஆயிரம் ரூபா நாணயத் தாளை உத்தியோகப்பூர்வமாக வெளியிட்டு வைத்தார் . சமாதானத்திற்கும் சுபீட்சத்துக்குமான வழி பிறந்துள்ளதை நினைவு கூரும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி புதிய ஆயிரம் ரூபா நாணயத் தாள் ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டு வைத்தது.

மக்கள் வங்கியின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் புதிய நாணயத் தாளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.




1998ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க நாணய நிதிச்சட்டத்தின் நியதி களின் கீழ் வெளியிடப்பட்டுள்ள புதிய நாணயத்தாள் நேற்று மூன்தினம் முதல் தேசிய ரீதியில் புழக்கத்திற்கு விடப்பட்டுள்ளது. தாளின் முன்பக்கத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் சுபீட்சத்தை நோக்கி முன்னேறிச் செல்கின்ற இணக்கம் மிக்க ஒரு நாடு என்ற தொனிப்பொருளும் தாளின் வலது பக்கத்தில் ஜனாதிபதியின் தோற்றம் பொறிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# சோமாலியா கொள்ளையரிடமிருந்து ஸ்பெயின் நாட்டினர் 36 பேர் மீட்பு

(கொழும்பு)

சோமாலியாக் கடல் கொள்ளையர்கள் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த போர்க்கப்பலைச் சிறைப்பிடித்தனர். அதிலிருந்த 36 பேரை பிணைக் கைதிகளாக வைத்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து கப்பல் கொள்ளையர்கள் இரண்டு பேரை ஸ்பெயின் கடற்படையினர் கைது செய்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த கொள்ளையர்கள் கைது செய்யப்பட்ட 2 பேரை விடுதலை செய்ய வேண்டும் . மேலும் பிணைக் கைதிகளை விடுவிக்க குறிப்பிட்ட அளவு பணம் தர வேண்டும் என மிரட்டல் விடுத்தனர்.

இது குறித்து எந்தவித பேச்சுவார்த்தை நடத்தியும் சமரத்தீர்வு ஏற்படவில்லை. இதைத் தொடர்ந்து ரூபாய் 16 அரை கோடி பணம் கொடுத்து பிணைக் கைதிகளாக இருந்த 36 பேரை ஸ்பெயின் அரசு மீட்டது. (ஓ-6)

# நல்லூர் பிரதேச சபையை நகரசபையாக தரம் உயர்த்துவதற்கான கலந்தாய்வு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பிரதேச சபைகளை நகரசபைகளாகத் தரம் உயர்த்தும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையை நகரசபையாக தரமுயர்த் துவது தொடர்பான கலந்தாய்வுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்தாய்வுக் கூட்டத்தில் நல்லூர் பிரதேசசபைப் பிரதேச பொதுமக்கள், பொது அமைப்புக்கள் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளிட்ட ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைகளை நகரசபைகளாகத் தரம் உயர்த்தும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் திட்டத்தின் அடிப்படையில் இத் தரமுயர்த்தல் செயற்பாட்டை செயற்படுத்த யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதும் யாழ்.மாவட்டத்தில் நகரசபைகளாகத் தரம் உயர்த்துவதற்கான திட்டத்தில் 5 பிரதேச சபைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ-14)

## கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின்

# வாழ்வாதாரத்திட்ட சுய தொழில் சுழற்சிக்கடன் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினரின் வாழ்வாதாரத்திட்ட சுயதொழில் சுழற்சிக் கடன் வழங்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் நல்லூர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரித்தாஸ்-கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி.ஜோ. ஜெயக்குமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரகுமார், கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் வாழ்வாதார திட்ட முகாமையாளர் என் தவராஜகுமார், நல்லூர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கா. ஐங்கரவேள், நல்லூர் தெற்கு ஜே/108 கிராம உத்தியோகத்தர் திருமதி ராகினி முருகன், சனசமூக நிலைய உப தலைவர் க.குமாரசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

# அரச கடன் எல்லை அதிகரிப்புக்கான சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

ஒதுக்கீட்டுத் திருத்தச் சட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் கடன் எல்லை அதிகரிப்புக்கான சட்ட மூலம் மீதான பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதற்கேற்ப அரசாங்கத்தின் கடன் எல்லை மேலும் 21 ஆயிரம் கோடி ரூபாவினால் அதிகரித்துக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான பிரேரணையை அரச வருவாய்த்துறை அமைச்சர் ரஞ்சிரத் சியம்பலாப்பிட்டிய சமர்ப்பித்தார். வரவு -செலவு திட்டத்தின் ஊடாக எதிர் பார்த்த அரச வருவாய் குறைந்துள்ளதாலேயே மேற்படி கடன் எல்லை அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

WESTERN UNION®
மணி டிரான்ஸ்பர்




வெளிநாட்டிலிருந்து
வெஸ்டன் யூனியன் மூலம்
அனுப்பப்படும் பணத்தை,
NDB வங்கி யாழ்ப்பாணக்
கிளையில் மாற்றி இந்த
அரிய பரிசினைப்*
பெற்றுக்கொள்ளுங்கள்

திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை
மு.ப. 09.00 - பி.ப. 15.00 வரை
சனிக்கிழமை மு.ப. 09.00 - பி.ப. 13.00 வரை
(போயா மற்றும் வங்கி விடுமுறைகள் தவிர்த்து)

62/6, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(இவ்விசேட சலுகை 2009 ஒக்டோபர் 19ம் திகதி முதல் டிசெம்பர் 31ம் திகதி வரை மட்டுமே)

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
* கையிருப்புக்கள் முடியும்வரை.

அழையுங்கள் 021 - 2 22 11 80/1

NDB வங்கி

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2009
# பயிற்சி வினாத்தாள் -கணிதம்

## பகுதி-II


By : S. Suthersan.
(Teacher ; Jaffna College.)

### பகுதி - A

* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

(01) a) $T_7$ என்பது கூட்டல் விருத்தியொன்றின் 07ஆம் உறுப்பும் $T_{11}$ என்பது, அத்தொடரின் 11ஆம் உறுப்பும் ஆகும். $7T_7 = 11T_{11}$ எனின், இத்தொடரின் 18ஆம் உறுப்பு O எனக் காட்டுக

b) ஒரு உடற்பயிற்சிக்குழுவினர் அரை வட்ட வடிவான ஒழுங்கமைப்பில் அணிவகுத்து நிற்பது அருகில் உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது. ஒழுங்கமைப்பின் நடுவில் அணித்தலைவர் காணப் படுகிறார். முதலாம் அரைவட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள வீரர்களின் எண்ணிக்கை மூன்று ஆகும். அடுத்துவரும் ஒவ்வொரு அரைவட்ட ஒழுங்குகளிலும், அதற்கு முந்திய ஒழுங்கமைப்பின் மும்மடங்கு வீரர்கள் அணிவகுத்து உள்ளனர்.



i. 05ஆம் அரைவட்ட வடிவ ஒழுங்கமைப்பில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை யாது?

ii. அணித்தலைவருடன் இவ் ஐந்து ஒழுங்குகளிலும் உள்ள வீரர்களின் மொத்த எண்ணிக்கையைக் காண்க?

iii. இவ் உடற்பயிற்சிக் குழுவில் மொத்தமாக 1,093 அங்கத்தவர்கள் உள்ளனர் எனின், அவர்கள் எத்தனை அரைவட்டங்களில் ஒழுங்குபடுத்தப் பட்டிருப்பர் எனக் காண்க?

(02) a) cm/mm அளவிடை உள்ள ஒரு நேர்விளிம்பு, கவராயம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி,

i. AB = 8cm, $CBA = 90^0$, BC = 5.6 cm ஆகவுள்ள முக்கோணி ABC ஐ அமைக்க?


ii. முக்கோணி ABC இன் பக்கம் CB ஐ C இலும், BA ஐ ஒரு புள்ளி D இலும் தொடுமாறு வரையத்தக்க வட்டத்தின் மையத்தின் அமைவைக் கண்டு, அதனை O எனப் பெயரிடுக?

iii. அவ்வட்டத்தை அமைக்க?

iv. A இலிருந்து வட்டத்திற்கு வரையத்தக்க மற்றொரு தொடலி AM ஐ வரைக?

b) முக்கோணி ABC இன் பரப்பளவிற்கும், வட்டத்தின் பரப்பளவிற்கும் இடையே உள்ள விகிதம் 1:4.4 எனக் காட்டுக?

(03) படத்தில் வரையப்பட்டிருப்பது, அடி ஆரை r உம், உயரம் 5r உம் உடைய திண்ம செவ்வுருளையிலிருந்து அதே ஆரை உடைய அரைக்கோளப் பகுதி குடைந்து எடுக்கப்பட்ட பின்னர், எஞ்சிய திண்மம் ஆகும்.




[r ஆரையும், h உயரமும் உடைய உருளையின் கனவளவு $\pi r^2 h$ உம், r ஆரை உடைய கோளத்தின் கனவளவு $^4/_3 \pi r^3$ உம் ஆகும்]


i. எஞ்சிய திண்மத்தின் கனவளவு (V) ஆனது,

$$V = \frac{13\pi}{3} r^3$$ இனால் தரப்படும் எனக் காட்டுக?

ii. V = 13.5 கனஅலகுகள் எனவும், $\pi$ 3.142 எனவும், தரப்படின் $r^3$ இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணையை உபயோகித்துப் பெறுக?

iii. பகுதி (ii) இல் நீர் பெற்ற விடையை கிட்டிய முழு எண்ணிற்கு மட்டம் தட்டி, உருளையின் உயரத்தைக் காண்க?

(04) a) "ஒரு சோடி எதிர்ப்பக்கங்கள் சமனும் சமாந்தரமாகவும் உள்ள ஒரு நாற்பக்கல் இணைகரமாகும்." எனும் தேற்றத்தை நிறுவுக.





b) முக்கோணிகள் PQR, ABC இல், பக்கங்கள் PR, AC இன் நடுப்புள்ளி K உம், பக்கங்கள் PQ, AB இன் நடுப்புள்ளி H உம் ஆகும்.

i. QR = 2 HK எனவும்,

ii. BQ // CR எனவும் நிறுவுக?

(05) a) "வட்டத்தின் ஒரே துண்டத்தில் அமைந்த கோணங்கள் சமனாகும்" நாற்பக்கல் ஒன்றின் உச்சிகள் வட்டத்தில் அமைந்திருப்பின், அந்நாற்பக்கல் ஒரு வட்ட நாற்பக்கலாகும். இக் கூற்றுக்கு அமைவாக மேலே கூறப்பட்ட தேற்றத்தின் மறுதலையாக அமையக்கூடிய தேற்றத்தைக் கூறுக?




b) AB, CD என்பன வட்டத்தின் இரு சமாந்தரமான நாண்களாகும். AD உம், CB உம் X இல் இடைவெட்டுகின்றது. வட்டத்தின் மையம் O ஆகும்.

i. BXD# = 2 ABC# எனவும்,

ii. BXOD ஓர் வட்ட நாற்பக்கல் எனவும் நிறுவுக?

(06) a) வன விலங்குகளிலிருந்து பயிர்ச் செய்கையை பாதுகாக்கும் காவலாளி ஒருவர் பயன்படுத்தும் கட்டுத் துப்பாக்கி வெடிப்பில் 20% வழு உடையதாகக் காணப்படுகிறது. காவலாளி இலக்கு ஒன்றை குறிபார்த்துச் சுடும் நிகழ்தகவு 5/6 ஆகும்.

இத்தகவல்களை ஒரு மரவரிப்படத்தில் குறித்துக் காட்டுக?

காவல் கடமையில் ஈடுபடும் போது,

i. துப்பாக்கியால் சுட்டு, விலங்கு ஒன்றை கொல்வதற்கான,

ii. பயிர்களை நாசம் செய்துவிட்டு விலங்கு தப்பிப் பதற்கான,

நிகழ்தகவுகளைக் காண்க?

b) குறித்த நாளில் 30 குண்டுகள் சுடப்பட்ட போது, 24 குண்டுகள் வெடித்து, 11 விலங்குகள் கொல்லப்பட்டன.

தரப்பட்ட வென்வரிப் படத்தைப் பிரதி செய்து, மிகவும் பொருத்தமான முறையில் விலங்கு தொடர்பான நிகழ்ச்சிக்குரிய பிரதேசத்தைக் (வட்டத்தை) குறித்து வென்வரிப் படத்தைப் பூரணப்படுத்துக.




i. துப்பாக்கியால் சுடப்பட்ட போது வெடித்த குண்டுகளில் குறித்தவறிச் சென்றவை எனும் பிரதேசத்தை நிழற்படுத்துக?

ii. பகுதி (i) இல் குறிப்பிடப்படும் பிரதேசத்தின் முதலியைக் காண்க?

# நாடும் மக்களும்

பல சதுர்வேதி மங்கலங்கள் அடங்கிய பகுதியில் நாடு என்ற அமைப்பு நிலை பெற்றிருந்தது. நானாதேசிகள், மணிக் கிராமம், மூவாயிரவர் என்ற தொழிற் சங்கங்களும், வியாபாரச் சங்கங்களும் அப்பொழுது நிலை பெற்றிருந்தன. மக்களுடைய அன்றாட பொருளாதார வாழ்க்கையில் கோவில்களும் சிறந்த சேவை செய்தன.

கிராம சபைகள் எவ்விதம் தோன்றின என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. அந்தணர்கள் மாத்திரம் வாழ்ந்த பிரம்மதேயக் கிராமங்களில் சபைகள் அமைந்திருந்தன. அந்தணர்களும் மற்றைய இனத்தவர்களும் சேர்ந்து வாழ்ந்த கிராமங்களில் ஊர்ச்சபைகள் இருந்தன. ஊர்சசைபகள் எவ்விதம் அமைக்கப்பெற்றன எனக் கூறமுடியவில்லை. சதுர்வேதி மங்கலங்களில் இருந்தசபைகள் எவ்விதம் அமைக்கப்பெற்றன என்று உத்திரமேரூக் கல்வெட்டுக்கள் தெளிவாகக் கூறுகின்றன.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

அந்தணர்கள் மாத்திரம் வாழ்ந்த சதுர்வேதிமங்கலத்தில் அமைக்கப்பெற்ற சபைகள் நிலவுரிமைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அக்காலத்திய கல்வெட்டுக்களில் ஏகபோகம், கணபோகம் என்ற இரு வகையான நிலவுரிமைகள் கூறப்பட்டுள்ளன. தனிமனிதன் ஒருவன் " தானாதிவினிமய" கிரய விக்கிரயங்களுக்குப் போக்கியமாய் புத்திர பௌத்திர பாரம்பரியமாய் அனுபவிக்கப் பெற்று வந்த நிலங்களுக்கு ஏகபோக உரிமையென்றும் கிராமத்தில் வசித்த எல்லா மக்களும் சேர்ந்து மேற்கூறப் பெற்ற உரிமைகளோடு அனுபவித்து வந்தால் அதற்கு கணபோக உரிமையென்றும் பெயர்கள் வழங்கின.

இரண்டாம் ஹரிஹரதேவரயர், அந்தணர்கள் பலர் கணபோக உரிமையுடன் நிலங்களை அனுபவிக்கும்படி சில நிலங்களைக் கொடுத்துள்ளார். அவ்வித நிலங்களைக் கிராமத்தில் வாழ்ந்த எல்லா அந்தணர்களும் தானாதி, வினிமய கிரய விக்கிரயங்கள் செய்தல்வேண்டும். 1529 ஆம் ஆண்டில் கடலாடி என்னும் கிராமத்தை இராமச்சந்திர தீட்சிதர் என்பாருக்கு ஏகபோக உரிமையாக அச்சுததேவராயர் வழங்கியுள்ளார்.

கணபோக உரிமையில் கீழ்க்கண்ட உரிமைகளைக் காணலாம்.

1. அவ்வுரிமையில் உள்ள நிலங்களை கிராமத்தைச் சேர்ந்த எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து உழுது பயிரிட்டனர். அவரவர்கள் உதவிய உழவிற்கும் மற்ற உழைப்பிற்கும் ஏற்றாற்போல் நிலங்களில் மகசூலைப் பிரித்துக்கொண்டனர். 2.சில கிராமங்களில் ஒரு பகுதி நிலங்கள் ஏகபோகமாகவும், மற்றொரு பகுதி கணபோகமாகவும் அனுபவிக்கப் பெற்றன. 3.சில கிராமங்களில் உள்ள நிலங்கள் முதல்,இடை,கடையென மூன்று தரங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தன. கிராம சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இம் மூன்று வித நிலங்களும் குறிப்பிட்ட காலத்திற்கு கொடுக்கப்பெற்று சாகுபடி நடப்பது உண்டு. தஞ்சை மாவட்டத்தில் இவ்வித நிலப் பிரிவினைக்கு கரையீடு என்ற பெயர் வழங்கியது. கணபோக கிராமங்களில் மக்கள் தொகை பெருகிய பொழுது அவர்களின் விவகாரங்களைக் கவனிக்க ஒரு குழு மிக அவசியமாயிற்று.

இந்தத் தேவைக்காகவே சபை உருப்பெற்றது. கணபோகம் அல்லது சமுதாயம் எனப்படும் கிராமங்களில் கூட்டு வாழ்வின் விளைவாக சபைகள் தோன்றின.

மேற்கூறப்பெற்ற நிர்வாகக் கடமைகளோடு கூட இன்னும் பல முக்கிய கடமைகளையும் சதுர்வேதிமங்கலக் கணேபாகச் சபைகள் ஆற்றின. கணபோகத்தைச் சார்ந்த நிலங்களை விற்பதும் வாங்குவதும் சபைகளே செய்து வந்தன. ஏகபோக கணபோக நிலங்களிலிருந்து நிலவரி வசூல் செய்து மத்திய அரசாங்க பண்டாரத்திற்கு அனுப்பி வைத்தன.

அரசாங்கத்திற்குரிய வரி வசூல் களை நிறுத்தி வைப்பதும், புதிய வரிகளை விதிப்பதும், அவ் வரிகளில் ஒரு பகுதியை தேவாலயங்களுக்கு மானியமாகக் கொடுப்ப தும் ஆகிய உத்தரவு களை மத்திய அரசாங்கத்தினர் கிராமசபைகளுக்கே அனுப்பி வைத்தனர். கிராமசபைகள் அந்த உத்தரவுகளைக் கோவில் சுவர்களில் வெட்டுவிப்பதும், வரி வசூல் புத்தகங்களில் அவற்றிற்கேற்ப மாற்றங்களை செய்து கொள்வதும் வேண்டும்.

வரிவிதிப்பு வசூல் முதலியவற்றில் மாற்றங்கள் நேருமாயின், அரசாங்கத்தார் கிராமசபைகளுக்கு உடனுக்குடன் தெரிவித்தனர். சபைகளைக் கலந்து ஆலோசித்த பிறகு புதிய வரிகள் விதிக்கப் பெற்றன. கிராமங்களுக்கென விதிக்கப் பெற்ற வரிகளை கிராம சபைகள் வசூல் செய்து கிராமங்களின் நன்மைக்கே செலவிட்டன. கிராம மக்களுக்கு நீதி வழங்கும் அதிகாரமும் சபைகளுக்கிருந்தன.

கிராமங்களில் குற்றங்கள் செய்தோருக்குத் தண்டனையாக அவர்களுடைய நிலங்கள் பறி முதல் செய்யப்பெற்றன. கிராமங்களிலுள்ள பொது விடயங்களும் மகாசபையால் பராமரிக்கப் பெற்றன. கோவில்களுக்கும் மற்ற அமைப்புக் களுக்கும் பொது மக்கள் வழங்கிய மானியங்களையும், அறக்கட்டளைகளையும் கிராமச் சபைகள் பாதுகாத்தன.

வேதப் பயிற்சி செய்யும் அந்தணர்களுக்கு உணவளிப்பதற்கு ஏற்ற காப்புறுதிக் கட்டணங்களைப் பாதுகாத்தன. தேவாலயங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பயிரிடுவதற்கும், அந்த வருமானத் தைக் கொண்டு நித்திய நைவேத்தியங்களை நடத்துவதற்கும் சபைகள் பொறுப்பேற்றன.

### தொழிற்சங்கங்களும் கூட்டுறவுகளும் 56

நாட்டின் பொருளாதார அமைப்பில் தொழிற் சங்கங்கள் இடம்பெற்றிருந்தன. ஒரே தொழில் செய்பவர் இதில் ஒன்றுகூடி, தங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தினர். இத் தொழிற்சங்கங்கள் அந்தந்த ஊரைச் சார்ந்தவையாக இருந்தன. சில சமயம் வெளி ஊரிலி ருந்தும் இதில் சம்மந்தம் பெற்றிருந்தனர். இத் தொழிற்சங்கங்க ளின் அங்கத்தினர் ஒரே மதத்தைச் சேர்ந்தவராகவே இருந் தன்ர்.

ஒரே மதத்தைப் பின்பற்றுபவர் என்ற காரணம் இத் தொழிற்சங்கங்களை ஒற்றுமையாக இயங்க வைத்தன. தொழிற்சங்கங்கள், வியாபாரச் சங்கங்கள் என்ற இரு வகையான அமைப்புக்களைப் பற்றிய பல ஆதாரங்கள் உள்ளன. ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் தமக்குரிய தொழில் வசதிக்காக அமைத்துக்கொண்ட சங்கம் தொழிற் சங்கமாகும்.

கலாநிதி
தெ.வே.மகாலிங்கம்

எடுத்துக்காட்டாக வீரபாஞ்சாலர் என்றழைக்கப் பெற்ற பொற்கொல்லர்கள், இரும்புக் கொல்லர்கள், கன்னார், தச்சர், விக்கிரகங்கள் வார்ப்போர் ஆகியோர் தங்களுக்குள் தொழிற்சங்கங்களை அமைத் துக்கொண்டனர். கிருஷ்ண தேவராயர் எழுதிய ஆமுக்தமால்யதா என்னும் நூலில் நெசவாளர், பொற்கொல்லர், பட்டுநூல்காரர், கோமுட்டிகள், கோணிப்பைகள் செய்வோர், கூடை முடவோர்கள் முதலிய தொழிலாளர் களின் சங்கங்களைப் பற்றிக் கூறப் பெற் றுள்ளது.

உப்பு உற்பத்தி செய்வோரும், தங்களுக்குள் சங்கங்கள் ஏற்படுத்தியிருந்தனர். பொதுவாக விஜயநகரப் பேரரசில் பதினெட்டு வகையான சங்கங்கள் இருந் தனவென அறிகிறோம். (தொடரும்)

## ஐ.தே.மு.பொது வேட்பாளருக்கு அஞ்சியே அரசு தேர்தல்களை ஒத்திவைக்க திட்டமிட்டுள்ளது

### ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்காலம் குறித்து உரிய திட்டங்களின்றி ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேசிய மாநாட்டில் எவ்வித எதிர்காலத் திட்டங்களுமின்றி ஜனாதிபதி உரையாற்றியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுவான வேட்பாளருக்கு அஞ்சி அரசாங்கம் தேர்தல்களை ஒத்திவைக்கத் திட்டமிட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முடியுமென்றால் தேர்தல்களை அறிவித்து ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிராக வெற்றியீட்டுமாறு ரணில் விக்கிரமசிங்க சவால் விடுத்துள்ளார்.

பொருளாதாரத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பது குறித்து ஜனாதிபதி எவ்விதத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேசிய மாநாட்டின் போது நாட்டிற்கு நன்மை ஏற்படக் கூடிய எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றப் படாமை பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளை மேற்கொள்வதற்காக அரசாங்கம் கடன்களைப் பெற்றுக் கொள்வதாகவும் இவற்றை எவ்வாறு மீளச் செலுத்துவது என்பது குறித்து போதிய தெளிவின்றி காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

## தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொதுநூலகத்தினால் நடாத்தப்படும் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு கைதடி பொதுநூலகத்தில் இடம்பெறவுள்ளது. கைதடி, நாவற்குளி உபபணிமனையின் பொறுப்பதிகாரி சி. பத்மநாதனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் திருமதி பு.ஆறுமுகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கமும், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. செ.ஜெகதீஸ்வரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச)

## 2005 தேர்தல் பகிஷ்கரிப்பு; விடுதலைப்புலிகளின் அவசர முடிவு

### முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 2005 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களை கேட்டுக்கொண்டமை ஒரு அவசர முடிவாகும் என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதன்விளைவு, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதாக உறுதியளித்திருந்த ரணில் விக்கிரமசிங்கவை மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்க உதவியது என்று தெரிவித்த கருணாநிதி, அதிலிருந்து பேச்சுவார்த்தை முடகப்பட்டு விட்டது என்றும் கூறியுள்ளார்.

பகிஷ்கரிப்பு கோரிக்கையை அடுத்து 7 இலட்சம் தமிழர்கள் முற்றாக வாக்களிக்காத நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவை ஒரு இலட்சத்து 81 ஆயிரம் வாக்குகளால் வெற்றி பெற்றார்.

அன்றைய அவசரமுடிவின் இன்றைய விளைவு என்ன? இன்று இலங்கை இராணுவத்தினால் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதையும் சுட்டிக்காட்டுவது போல் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார். (ஓ-6)



மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 15 மாணவர்களுடன் வித்தியாலய அதிபர் வே.விநாயகமூர்த்தி, ஆசிரியர்கள் திருமதி கி.அமிர்தகுலசிங்கம் திருமதி ர.தயாபரன், ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர் திருமதி அ.யோகராசா ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை கண்டுபிடிக்க பக்டீரியா கரைசல்

## அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை

(வோஷிங்டன்)

மண்ணில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை பக்டீரியா மூலம் கண்டு பிடித்து அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். அமெரிக்காவின் எடின்பர்க் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

ஒருவித நிறமற்ற இரசாயனத்துடனான ஒருவகை பக்டீரியா கலந்த கரைசலுக்கு கண்ணிவெடிகளை கண்டுபிடிக்கும் திறன் உண்டு என்பதை அவர்கள் நிரூபித்துள்ளனர்.

எங்காவது கண்ணிவெடிகள் இருப்பதாக சந்தேகப்பட்டால் அந்த இடத்தில் தற்போது கண்டுபிடித்துள்ள பக்டீரியா கரைசலை தெளிக்கவேண்டும். கண்ணிவெடி இருக்குமானால் அந்த இடத்தில் பச்சை நிறமாகத் தோன்றும்.

இல்லையேல் கரைசல் எவ்வித மாற்றத்தையும் உருவாக்காது. இதை வைத்து ஒரு இடத்தில் கண்ணிவெடி உள்ளாதா, இல்லையா என்பதை கண்டுபிடித்துவிடலாம் என்கின்றனர் அந்த விஞ்ஞானிகள். தற்போதைய நிலையில் கண்ணிவெடி கண்டுபிடிக்கும் சோதனைக்கு அதிக செலவிட வேண்டியுள்ளது.

ஆனால் நாங்கள் கண்டுபிடித்துள்ள பக்டீரியா கரைசல் சோதனை மூலம் குறைந்த செலவில் கண்ணிவெடியை கண்டுபிடித்து விடலாம்.

அத்துடன், கண்ணிவெடியைக் கண்டு பிடிக்க உதவும் இரசாயனம் மற்றும் பக்டீரியாவால் மனிதர்களுக்கோ, விலங்குகளுக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் அந்த விஞ்ஞானிகள் கூறினர்.

உலகம் முழுவதும் ஆண்டுக்கு 15 ஆயிரம் முதல் 20ஆயிரம் பேர் வரை கண்ணி வெடித் தாக்குதலில் பலியாகின்றனர் என்பது தெரிய வந்துள்ளது.

இது வருத்தம் அளிக்கக்கூடியது. இந் நிலையில் கண்ணிவெடித் தாக்குதல் அதிகம் நிகழும் நாடுகளுக்கு எங்களது கண்டுபிடிப்பு பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம் என்றும் அந்த விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (ஓ-6)

# மாரடைப்பில் சுருண்டு விழுந்த எஜமானாரை காப்பாற்றிய நாய்

(வார்சா)

மாரடைப்பால் தரையில் சுருண்டுவிழுந்த எஜமானாரைக் காப்பாற்றியது செல்ல நாய். போலந்து நாட்டில் வார்சா நகரில் வசித்து வருபவர் ஸ்ட்ரைகன் பைஜோடர் வேக்னர் (50) இவர் வளர்க்கும் செல்ல நாய் ஜோக்ரஸ்ஸல் இரண்டு வயதாகிறது.

சமீபத்தில் வீட்டில் ரீவி பார்ததுக்கொண்டிருந்தார். அப்போது வீட்டில் யாருமில்லை. செல்லநாய் மட்டும் இவருடன் இருந்தது. ரசித்துப்பார்த்துக்கொண்டிருந்த இவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. வலி தாங்க முடியாமல் மார்பைப் பிடித்துக் கொண்டு சாய்ந்துவிட்டாார்.

எஜமான் மார்பைப் பிடித்துக்கொண்டு சாய்கிறாரே ஏதோ வலியால் துடிக்கிறார் என்று உணர்ந்த நாய் தனது பின்னங்காலுக்கு மேல் உள்ள இதய வடிவிலான சதைப்பகுதியை வைத்து அவர் மார்பில் இறுகத் தேய்த்துள்ளது.

அதனால் வேக்னர் படிப்படியாக வலி குறைந்து பழைய நிலைக்கு வந்துள் ளார். பின்னர் மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றார்.

டாக்டர்கள் கூறுகையில், வேக்னருக்கு மாரடைப்பு ஏற்பட்டபோது நாய் சமயோசிதமாக செயல்பட்டு அவரது வலியைக் குறைத்துள்ளது.

அதனால் தான் அவரால் இங்கு வந்து சிகிச்சை பெறமுடிந்தது. நாய் செய்த செயலால் அவர் உயிர் பிழைத்துள்ளார் என்றனர். வேக்னர் தனது செல்லப்பிராணி பற்றிக் கூறுகையில், எனது நாயின் செயலைக் கண்டு பிரமித்துப் போயுள்ளேன் என்றார். (ஓ-6)

## இரத்ததானம் வழங்கி தேசிய மட்டத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

ஹாட்டிலியின் மைந்தர்கள் தின ஞாபகார்த்தமாக நேற்றும் நேற்று முன்தினமும் ஹாட்லி கல்லூரியில் இரத்ததான முகாமும் நடைபெற்றது.

இம் முகாமில் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட 209 பேர் இரத்ததானம் வழங்கி தேசிய மட்டத்தில் முதல் இடம்பெற்றுள்ளனர்.

இதற்கு முன்னர் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் இருந்து 201 பேர் இரத்ததானம் வழங்கி தேசிய மட்டத்தில் முதல் இடம்பெற்று சாதனையாளராகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் "தேவிபாகவதம்" என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-4-35)

## கோதுமை மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அரச உணவுக் களஞ்சியங்களில் இருக்கின்ற கோதுமை மா பாவனைக்கு உகந்தது என சுகாதாரத் திணைக்களம் சிபார்சு செய்துள்ளது.

எனவே பேக்கரிச் சங்கங்களிற்கு கோதுமைமாவினை விநியோகிக்குமாறு நீதி மன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக பேக்கரி சங்கங்களுக்கு நேற்று தொடக்கம் மா விநியோகம் மேற்கொள்வதற்கு மாவட்டச் செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மேலும் ப.நோ.கூ. சங்கங்களில் மாவட்டச் செயலகத்தினால் விநியோகிக்கப்பட்ட மாவும் விற்பனைக்கு உகந்தது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இலவச பாடநூல்கள்

(அல்வாய்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கல்வி வலயங்களுக்குமான இலவசப் பாடநூலின் ஒரு தொகுதி இம்மாதம் 22 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரிக்கு எடுத்துவரப்படவுள்ளது.

எனவே சகல கோட்டக்கல்வி அதிகாரிகளும் அன்றையதினம் இந்துக்கல்லூரிக்குச் சமுகமளித்து தங்களுரிக்குரிய இலவசப் பாடநூல்கள் எடுத்துவரும் லொறியை தங்கள் கோட்டத்திற்கு நேரடியாகக் கொண்டு சென்று இறக்குமாறு யாழ். மேலதிகக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்டணம் அறிவித்துள்ளார். (ஓ-6-19)


# அரசாங்க பெறுகை அறிவித்தல்

## சுகாதார சேவைகள் பிரிவு- யாழ்ப்பாணம்

## ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை பெற்றுக்கொள்ளல்- 2010

2010ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 01.01.2010 தொடக்கம் 31.12.2010 வரையான காலப்பகுதிக்கு பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவை பெற்றுக் கொள்வதற்கான பெறுகைகள் 2009.12.11ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பெற்று முற்பகல் 10.15 மணிக்கு திறக்கப்படும். பெறுகைப்பத்திரங்கள் பெற விரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழையும் (Worth Report) எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப வங்கி உத்தரவாத முறியையும் (Bank Bid Bond) சமர்ப்பித்து பெறுகைப்பத்திரப் பணமாக மீளளிக்க முடியாத ரூபா 500 உம் அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி 2009.12.10 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்கள் பின்வருமாறு

| இல | விபரம் | மீளளிக்கக் கூடிய வைப்புத் தொகை | வங்கி உத்தரவாத முறி | பெறுமதி ஆவணம் |
|---|---|---|---|---|
| 01 | பாதுகாப்புச் சேவை | 3,000.00 | 150,000.00 | 50,000.00 |
| 02 | சுத்திகரிப்புச் சேவை | 3,000.00 | 100,000.00 | 50,000.00 |

சுத்திகரிப்புச் சேவை

| நிறுவனங்கள் | ஆ.வை. பருத்தித்துறை | ஆ.வை. தெல்லிப்பழை | ஆ.வை சாவகச்சேரி | ஆ.வை ஊர்காவற்றுறை | பி.வை சங்கானை | பி.சு.சே.ப.பணிமனை (பண்ணை உட்பட) |
|---|---|---|---|---|---|---|
| தொழிலாளர்கள் எண்ணிக்கை | 20 | 10 | 10 | 08 | 08 | 03 |
| மேற்பார்வையாளர்கள் எண்ணிக்கை | 04 | 02 | 02 | 02 | 02 | - |

பாதுகாப்புச்சேவை

| | ஆ.வை. பருத்தித்துறை | ஆ.வை. தெல்லிப்பழை | ஆ.வை சாவகச்சேரி | ஆ.வை ஊர்காவற்றுறை | பி.வை சங்கானை | பி.சு.சே.ப.பணிமனை (பண்னை உட்பட) |
|---|---|---|---|---|---|---|
| பாதுகாப்பு காவலாளிகள் எண்ணிக்கை (பகல்) | 05 | 03 | 03 | 02 | 02 | 03 |
| பாதுகாப்பு காவலாளிகள் எண்ணிக்கை (இரவு) | 03 | 02 | 02 | 02 | 02 | 03 |

சகல பெறுகைகளும் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு பெறுகை கடிதத்தின் இடப் பக்க மேல் மூலையில் பெறுகை விபரம் தெளிவாக எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப்பெட்டியில் இடப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதாயின் ***பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்*** என்ற விலாசமிட்ட உறையில் வைத்து அனுப்பப்பட வேண்டும். பெறுகைகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்கமாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாக அல்லது தொழில் திணைக்கள கூலிவீதத்திற்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் பெறுகைகளும் தெளிவில்லாத அல்லது பிழையாக நிரப்பப்பட்ட பெறுகைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இப் பெறுகைகள் தொடர்பான ***இறுதித் தீர்மானம் கேள்விச்சபைக்கே உரியது.*** மேலதிக விபரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் (காலை 9.00 முதல் மாலை 3.30 வரை) அறிந்து கொள்ள முடியும். பெறுகைகள் திறக்கப்படும் போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ள முடியும்.

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-3741)

# CEYLON ELECTRICITY BOARD

(Northern Province)

## REGISTRATION OF SUPPLIERS & SERVICES FOR THE YEAR 2010

Applications are invited from manufacturers, Distributors, Agents, Suppliers and Contractors who wish to register themselves for the supply of items and provide services to the Northern Province of Ceylon Electricity Board, Jaffna for the year 2010.

ITEM CATEGORY

### (A) Meterial

M - 1 MCCB, MCBs, ELCBs, RCCB, Cut outs
M - 2 Fuse Links, HRC Fuse,Fuse Carriers, Insulators.
M - 3 Bimetallic Clamps, Cable lugs, Comparison Connectors,ABC Accessories
M- 4 Safety equipment, Small Tools,Measuring instruments, Ladders
M- 5 Copper and A1 Cables,Conductors, and Binding wires
M- 6 Nuts & Bolts,Stay Assembly, Washers, Thimbles, etc
M- 7 Stay wires, Cross Arms
M- 8 Meter Boxes & Boards (Wooden)
M -9 Stationary, Office Equipment,Steel Cabinets etc
M- 10 Paint & Hardware
M- 11 Reinforced & Pre Stressed Concrete Poles
M- 12 Computers ,Printers, Network & Accessories
M- 13 Electrical Fittings, Halogen fittings, Flood lights Fittings, Street lamps, Main Switches, Electrical Appliances etc.
M -14 Jointing Kits( Compound type, Heat Shrinkable & Resin Type) Right Angle Boots, Straight boots, Tubing,Black Cotton Tape. Empire Tapes, Linen Tapes, Oil Impregnated Tape, Oil Resisting Tape, Bitumen Compound, Plumping metal, Tin Solder.
M -15 Tyres & Tubes for Motor Vehicles
M -16 LT & HT Cable Tiles

### (B) Services

S - 1 Registration of Contractors for Transport of Meterials ( Transformers,Poles, etc)
S - 2 Registration of Contractors for Provision of Service Connections (Seperate Applicants for each ECSC)
S - 3 Registration of Contractors for Way Leave Clearing (Separate Applicants for each ECSC)
S - 4 Registration of Contractors forConstructions of MV & LV Distribution Lines & Substations
S - 5 Registration of Contractors for Rehabilitation & Augmentation of MV & LV Distribution Lines, Substations & Service Connections
S - 6 Registration of Contractors for Loss Reduction Works in LV Distribution Lines
S -7 Registration of Contractors for Man Power Supply Agencies to obtain the services of Clerks, Data Entry operators, Office labourers, Unskilled & Skilled Field Labourers ,Drivers, & Security Presonnel
S - 8 Registration of Contractors for Janitorial Services
S - 9 Printing
S - 10 Repairing & Servicing of Motor Vehicles.
S - 11 Aluminium & Wooden partitioning.
S - 12 Civil Contractors for Construction of Subtation Buildings & Building Repairs (ICTAD) Registered grade -M-8 or above
S - 13 Contractors for Substations, Building Maintenance, Yard Clearing
S - 14 Repair of Electrical, Electronic, Electro Mechanical, Mechanical equipment & Workshop Services
S - 15 Under ground cable laying

### Conditions:

A complete set of documents for Registration of suppliers & Services (Applications) could be obtained from office of the Deputy general Manager (North), Ceylon Electricity Board, No.500,K,K.S Road, Jaffna, on working day *20th November 2009 to 15th December 2009* on payment of a non- refundable fee of Rs. 500.00 per item in cash or Bank Draft in favour of the General Manager,Ceylon Electricity Board for each item category as mentioned above.

The document shall be duly completed and returned ton the Deputy General Manager (north) Ceylon Electricity Board on or before *15th December 2009* at 10.00 hrs.

The applicants are required to submit the documents separately for each category of meterial and

of service in cash or Bank Draft drawn in fovour of the General Manager, Ceylon Electricity Board, being the refundable security deposit for each item under category(A)and(B) above.

The Applications received after the scheduled time *15th December 2009* at 10.00 hrs will not be entertained and will be returned unopened.
Terms and conditions for registration of suppliers will be provided along with the applications.

Deputy General Manager (North)
Ceylon Electricity Board,
No : 500 K.K.S Road, Jaffna.

"Energy is Life
Start savings Now...!
For Our Future"

(C-3739)

## ஆட்டோ சாரதிகளுக்கு...

(யாழ்ப்பாணம்)

யாழ். பட்டினப் பகுதியில் சேவையில் ஈடுபடும் ஆட்டோ உரிமையாளர்கள் சாரதிகள் கூடுதல் கட்டணங்களை அறவிடுவதாக தங்களுக்கு பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவை தொடர்பாக நிரூபிக்கப்படுமிடத்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். பட்டினப் பகுதியில் சேவையில் ஈடுபடும் ஆட்டோ உரிமையாளர்கள், சாரதிகள் குறித்து எமது சங்கத்திற்கு பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சகல ஆட்டோ உரிமையாளர்களும் சாரதிகளும் எந்தவொரு காரணத்தைக் காட்டியும் குறிப்பிட்ட இடங்களுக்கு அதிகளவு கட்டணத்தை அறவிடமுடியாது என்பதை தெரியப்படுத்துகின்றோம்.

வாடிக்கையாளர் மனம் வருந்தும் கட்டண அறவீடுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துமீறி கூடுதல் கட்டண அறவீடுகள் சம்பந்தமாக தெரிவிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இது சங்க அங்கத்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## பராமரிப்பு வேலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையில் பராமரிப்பு வேலைகளுக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் பேரவையின் கொக்குவில் காரியாலயத்திற்கு வந்து உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அறிவிக்கும் பட்சத்தில் விரும்பும் படியான பராமரிப்பு வேலைகள் ஒழுங்கு செய்து தரப்படும் என பேரவையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் வீடுகளில் மூத்த பிரஜைகளை பகல் / இரவு பராமரித்து அவர்களுக்குரிய கடமைகளைச் செய்ய விரும்புவோர், அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளை பகல் நேரம் பராமரிக்க விரும்புவோர் உடனடியாக இல. 95, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள பேரவையின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் அவர் அறிவித்துள்ளார். (ஓ-6)

## மூத்தபிரஜைகளின் உதவி கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மூத்த பிரஜைகள் மனநிம்மதியுடன் வாழ ஒவ்வொரு குடும்பத்திற்கும் எப்படிப்பட்ட உதவிகளை பேரவையிடமிருந்து எதிர்பார்க்கிறீர்கள் என்ற விபரங்கள் அடங்கிய கடிதங்களை பிரதேச செயலாளர்கள் மூத்த பிரஜைகள் சங்கங்கள் ஊடாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ கடிதங்கள் மூலம் பேரவை செயலாளருக்கு விலாசமிட்டு இம்மாத முடிவிற்குள் அனுப்பிவைக்குமாறு 95, கே.கே.எஸ்.வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட மூத்தபிரஜைகள் பேரவை கேட்டுக்கொண்டுள்ளது.


கோரிக்கைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஒவ்வொரு விண்ணப்பதாரருடனும் நேரடியான தொடர்புகள் வைத்துக்கொள்ளப்படும் எனவும் பேரவை செயலாளர் அறிவித்துள்ளார். (6)

## புதிய அலுவலக திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

லங்கா பெல் நிறுவனத்தின் நவீன வசதிகளுடன் புதிய அலுவலகம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இ.129, கே.கே.எஸ். வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஓ-6)

# கார்த்திகை மாதப் பலன்கள்



## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1-ஆம் பாதம் வரை)**

உற்சாகத்தோடு பணிபுரிந்து உடனுக்குடன் காரியங்களை முடித்துக் கொடுக்கும் சிம்மராசி நேயர்களே!

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் சூரியனோடு, தனாதிபதியும், விரயாதிபதியும் இணைந்து மாதம் தொடங்குவதால் வரவிற்கேற்ற செலவு வந்துகொண்டே இருக்கும். வருங்கால நலன் கருதி புதுப்புது திட்டங்களை தீட்டிக் கொண்டே இருப்பீர்கள். நிலையான தொழில் செய்ய வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும்.

ஏழரைச் சனியின் ஆதிக்கத்தில் ஐந்து வருட காலம் முடிந்து விட்டது. இன்னும் இரண்டரை வருடகாலம் பாக்கி இருக்கிறது. அது குடும்பச் சனி தான் என்றாலும் குழப்பங்களை இடையிடையே கொடுத்து நிவர்த்தி செய்யும். கணவன் மனைவி இடையே கசப்புகள் ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சனிப்பெயர்ச்சிக்கு பிறகு ராகு - கேது பெயர்ச்சி அதற்குப் பிறகு குருப் பெயர்ச்சி என்று ஒவ்வொரு பெயர்ச்சியாக வந்து கொண்டிருந்தும் நாம் எதிர்பார்த்த பலன் இன்னும் திருப்தியாக கிடைக்கவில்லையே என்று ஏங்குவார்கள். இம்மாதக் கடைசியில் வரும் குருப் பெயர்ச்சியால் குதூகலம் காணப்போகிறார் கள்.


ஏனென்றால் பெயர்ச்சியாகும் குரு உங்கள் ராசியை ஏழாம் பார்வையாகப் பார்க்கப் போகிறார். எனவே வாழ்க்கையில் வசதி வாய்ப்புக்களை அதிகம் பெறப்போகிறீர்கள். பார்க்கும் குருவால் பணவரவு பெருக குருப் பெயர்ச்சிக்கு முன்னதாகவே நடைபெறும் குரு ஹோமங்களில் கலந்துகொண்டு முழுமையாக பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

நவம்பர் 27-ஆந் திகதி தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 2, 11க்கு அதிபதி 05 இல் உலா வரும் பொழுது பிள்ளைகளின் கல்வி நலன் கருதியும் கல்யாணக் கனவுகளை நனவாக்கும் பொருட்டும் ஒரு தொகை செலவிட்டு மகிழ்வீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். இது வரை நூறு முறை பஞ்சாயத்துக்கள் செய்தும் ஒத்துவராத உடன்பிறப்புகள் இப்பொழுது நீங்கள் எதிர்பாராத விதத்தில் ஒத்து வந்து முடித்துக் கொள்ளலாம் என்றும் சொல்வர். தன லாபாதிபதியான புதன் தனுசில் ராகுவுடன் இணைவதால் பங்காளிப் பகை மாறும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். ஆடை ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

நவம்பர் 28-ஆந் திகதி விருச்சிக ராசி யில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். 3 , 10-க்கு அதிபதி சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது முன்னேற்றங்கள் அதிகரிக்கும். நண்பர்களின் தொடர்பாடல் நலம் காண்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குரு உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாவார். அவர் உங்கள் ராசியைப் பார்க்கும் பொழுது நோய்கள் அகலும். நோக்கும் இடமெல்லாம் இருந்த தாக்குதல்கள் விலகும். தேக்க நிலைமாறி செல்வ நிலை மேலோங்கும். தொகை வந்து கொண்டே இருக்கும். தொழில் வளர்ச்சிக்கு உறவினர்களும் நண்பர்களும் ஒத்துழைப்புச் செய்வர். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

இம்மாதம் முல்லைப்பூ மாலை சூட்டி உள்ளம் உருகி குருவை வழிபட்டால் எல்லையில்லாத நற்பலன்கள் வந்து சேரும்.



## கன்னி

**(உத்தரம் 2, 3 ,4 பாதங்கள் அத்தம், சித்திரை 1,2ஆம் பாதங்கள் வரை)**

**மாற்றுக்கருத்துடையோரின் மனதை விரைவில் மாற்றும் கன்னி ராசி நேயர்களே !**

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்மச் சனியின் ஆதிக்கம் ஒரு புறம் சுகஸ்தானத்தில் உள்ள ராகுவின் ஆதிக்கம் மற்றொரு புறமும் இருப்பதால் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். அதற்காக விரயங்களை மேற்கொள்ளும் சூழ் நிலை உருவாகாமால் இருக்க ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை. எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஒரு முறைக்கு இரு முறை அதை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இரண்டாவது சுற்று சனி நடப்போர்கள் ஓரளவு நன்மைகளை அடைவர். குரு பார்க்கும் குழப்பங்கள் அதிகமாக இருக்கிறதே என்று நீங்கள் நினைக்கலாம். நீச்சம் பெற்ற நிலையில், குரு பார்க்கிறார் என்பதால் எதிர்பார்த்த பலன்கள் சற்றுத் தாமதமாகவே நடைபெறும்.

எனவே குரு பார்வையை பலப்படுத்த குரு ப்ரீதி செய்வது நல்லது. அது மட்டுமல்ல ராகு கேதுகளுக்கு ப்ரீதி செய்தால் தேக நலன் தெளிவாக இருக்கும். செல்வ நிலை உயரும்.

இனிப் பெயர்ச்சியாக போகும் குருவும் 6ஆம் இடத்திற்குச் செல்ல இருக்கிறார். எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் 6ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது எந்த விதமான பாதிப்புக்களும் ஏற்படாமல் இருக்க குருப் பெயர்ச்சிக்கு முன்னதாகவே நடைபெறும் குரு ஹோமங்களில் கலந்து கொண்டு குருவருளைப் பெறுவது நல்லது.

நவம்பர் 27ஆம் திகதி தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சுப விரயங்களை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அஞ்சல் வழியில் அனுகூலச் செய்தி வந்து சேரும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். நீண்ட நாட்களாக எதர்பார்த்து காத்திருந்த காரியம் ஒன்று நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். நூதனப்பொருட்சேர்க்கை அதிகரிக்கும். நவம்பர் 28ஆம் திகதி விருச்சிக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக குடும்பத்திற்குத்தேவையான பொருட்களை வாங்கி

**சிவல்புரி சிங்காரம்**

மகிழவீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பர். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். மாதக் கடைசியில் 6ஆம்இடத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். எனவே உத்தி யோகத்தில் திடீர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு உருவாகலாம். ஆரோக்கியத்திற்காக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. கட்டுக்கடங்காது செலவுகள் ஏற்படுகின்றது என்று கவலைப்படுவீர்கள். குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வதன் மூலமும் அனுகூல ஸ்தலங்களை தேர்ந்தெடுத்து அடியெடுத்து வைப்பதன் மூலமும் நல்ல வாய்ப்புக்களை வரவழைத்துக்கொள்ள இயலும். இம்மாதம் இனிய மாதமாக மலர சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள் சஞ்சலங்கள் தீரும் சந்தோஷங்கள் சேரும்.

(தொடரும்)

---

### நாட்டின் நிலைமையை நேரில் கண்டறிய

# போப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போதைய நிலவரம் குறித்து நேரில் கண்டறிவதற்கு போப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேனைச் சேர்ந்த மதகுரு பேன் ஜோர்டான் மற்றும் மருத்துவரான பிரயன் செனவிரட்ன ஆகியோர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

யுத்தம் காரணமாக வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் நிலைமைகள் குறித்து பாப்பரசர் 16 ஆம் பெனடிக் ஆண்டகை நேரில் பார்வையிட வேண்டுமென அவர்கள் கோரியுள்ளனர்.

இடம்பெயர் முகாம்களின் நிலவரம் திருப்தி யடையும் வகையில் அமையப் பெறவில்லை எனவும் படகு மூலம் வேறும் நாடுகளுக்கு தமிழர்கள் தஞ்சம் கோரி வரும் செயன்முறை யில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை என குறித்த இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் வீடுகளை இழந்து அல்லலுறுவதாக வணக்கத்துக்குரிய பிதா ஜோர்டன் தெரிவித்துள் ளார்.

சரணாகதி கோரி அவுஸ்திரேலியா வரும் இலங்கையர்களை திருப்பி அனுப்பி வைப்பது மரண தண்டனைக்கு நிகரானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தமிழர்களை மட்டுமன்றி கிறிஸ்தவர்களையும் பாதித்துள்ளதாக டாக்டர் பெர்னாட் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (ஓ-6)

# கட்சி மாநாட்டிற்காக பொதுமக்களின் பணம் விரயமாக்கப்பட்டுள்ளது

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கட்சி மாநாட்டிற்காக பொதுமக்களின் பணம் விரயமாக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய மாநாட்டின் கலை நிகழ்வுகளுக்காக 8.9 மில்லியன் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து குறித்த பணம் செலவிடப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கலை நிகழ்வுகளில் பங்கேற்ற 2400 இளைஞர் யுவதிகளுக்குத் தேவையான உணவு மற்றும் போக்குவரத்து செலவுகளுக்காக பெருந்தொகை பணம் செலவிடப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் பணத்தை எவ்வாறு கட்சியின் சொந்தத் தேவைகளுக்காக பயன்படுத்த முடியும் என ஜே.வி.பி இளைஞர் விவகார அமைச்சரிடம் எழுத்து மூலம் கோரியுள்ளது.

பணம் செலவிடப்பட்ட விதம் தொடர்பிலான ஆதாரங்களும் இந்த கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

---

# சிறைக் கைதிகளின் மேம்பாட்டுக்கு பல மாற்றுத்திட்டங்கள்

### சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தகவல்

(கொழும்பு)

சிறைக் கைதிகளின் மேம்பாட்டுக்காக பல மாற்றுத்திட்டங்களை சிறைச்சாலைகள் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர்ஜெனரல் வீ.ஆர்.டி.சில்வா தெரிவித்தார். தகவல் ஊடகத்துறை அமைச்சில் தேசிய அபிவிருத்திக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொது மன்னிப்பின் கீழ் 1850 படை வீரர்களும் மூவாயிரத்து 500 சிறைக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து தற்போது 28 ஆயிரத்து 800 பேர் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். 12 ஆயிரம் கைதிகளை சிறை வைக்கவே தற்போதுள்ள சிறைக்கூடங்களில் இட வசதி உள்ளது எனினும் அந்த இடங்களில் 28 ஆயிரத்து 800 பேர் தற்போது சிறை வைக்கப் பட்டுள்ளனர்.

சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக 3 முகாம்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கண்டி பள்ளேகல பதுளை மற்றும் வீரவில ஆகியபகுதிகளில் இவை அமைக்கப்படவுள்ளன.

மேலும் 16 வயது முதல் 22 வயது வரையிலான 66 இளம் குற்றவாளிகள் உள்ளனர். பொதுவான கைதிகளுடன் வைக்கப்பட்டிருந்த அவர்களை வேறு படுத்தியுள்ளதுடன் அம்பேபுஸ்ஸ பகுதியில் புறம்பாக ஒரு முகாம் அமைத்து அவர்களை அங்கு தங்க வைத்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று மற்றும் ஒரு விசேட திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. பொதுவான சிறைக்கூடங்களில் குழந்தைகளுடனான 40 தாய்மார்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர். இவ் வாறு வைப்பதனால் குறிப்பிட்ட குழந்தைக ளின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. அந்த குழந்தைகளுக்கு வித்தியாசமான சூழலை ஏற்படுத்தும் நோக்கில் குழந்தைகள் உள்ள தாய்மார்களை வேறாக வைப்பதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு கூடுதலான தாய்மார்கள் கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை புறம்பாக வைக்கும் திட்டத் திற்கு ஏற்ப முதல் கட்டமாக களுத்துறையில் தனிப்பட்ட பிரிவு ஒன்றை உருவாக்கியுள் ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

### வவுனியா இடம்பெயர் முகாம்களில்

# போதிய சுகாதார வசதிகள் இன்மையால் கடந்த மாதத்திற்குள் 41 குழந்தைகள் இறப்பு

வவுனியாவில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களில் மகப்பேற்றுக்கான போதிய சுகாதார வசதிகள் இன்மையால் கடந்த மாதத்திற்குள் 41 குழந்தைகள் இறந்துள்ளன.

இதனைத் தவிர போதுமான மருத்துவ வசதிகள் இன்றி தினமும் வயோதிபர்கள் பலர் உயிரிழந்து வருவதாக தெரிய வந்துள்ளது. இவ்வாறு உயிரிழந்த குழந்தைகள் மற்றும் முதியவர்களின் உடல்கள் வவுனியா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் அரசாங்கத்தின் செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

உரிமை கோர எவரும் இல்லாத நிலையில் இடம்பெயர்ந்தோர் முகாமில் உயிரிழந்த முதியவர்களின் சடலங்கள் சுமார் 3 மாதங்கள் வரை வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்ததாகவும் வைத்தியசாலை தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# இன்று ஒரு தகவல்

## அரசனின் வைரமோதிரம்

ஓர் அரசர் இருந்தார். அவருக்கு வயதாகி விட்டது. அதனால் அவர் உள்ளத்தில் கவலையும் பயமும் குடிகொண்டன. மரண பயம் காரணமாக அவரால் இரவில் சரியாகத் தூங்க முடியவில்லை. ஏற்கனவே போர்க்களங்களில் எத்தனையோ பேரை ஓட ஓட விரட்டியவர் இந்த அரசர்.

ஆனாலும் இப்போது அந்தத் துணிச்சலெல்லாம் அவரிடமிருந்து எங்கேயோ போய்விட்டது.

'என்ன செய்யலாம் என்று யோசித்த அரசர், எல்லா அமைச்சர்களையும் அழைத்து, எனக்கு ஓர் ஆலோசனை சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

"என்ன யோசனை?" என்று அமைச்சர்கள் வினவினர்.

"எனக்கு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டுவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த நேரத்தில் நீங்கள் யாருமே ஆலோசனை சொல்வதற்கு என் பக்கத்தில் இல்லை என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு உபயோகப்படும் வகையில் ஒருவாசகம் – பொன்மொழி சொல்லுங்கள். அதை நான் என்னுடைய வைரமோதிரத்தின் அடியில் பதித்து வைத்துக் கொள்வேன்" என்றார்.

அவர் போட்டிருந்த வைர மோதிரம் அதற்குத் தகுந்தாற் போல் திறந்து மூடக்கூடியவாறு அமைந்திருந்தது.

அமைச்சர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து 'அரசருக்கு என்ன வாசகம் சொல்லலாம்?" என்று யோசித்தார்கள்.

ஒருவருக்கும் ஒன்றும் சரியாகத் தோன்றவில்லை. அந்த நேரத்தில் பெரியவர் ஒருவர் அங்கே வந்தார்.

"நான் அரசர் கேட்டதற்குப் பொருத்தமாக ஒரு வாக்கியம் சொல்வேன். ஆனால் ஒரு நிபந்தனை. அதை ஆர்வம் காரணமாக யாரும் அவசரப்பட்டுப் படிக்கக்கூடாது. அதை இரகசியமாக அந்த மோதிரத்திற்குள் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். அரசர் எப்போதாவது இக்கட்டில் மாட்டிக் கொள்ளும் போது வேறு வழியே இல்லை – என்ற நிலைமை ஏற்படும்போது மட்டும் தான் மோதிரத்தைத் திறந்து பார்க்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

பெரியவரின் நிபந்தனையை அரசர் உட்பட அமைச்சர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

பெரியவர் கூறிய வாக்கியத்தை இரகசியமாக மோதிரத்திற்குள் பதித்து மூடினார்கள். அரசர் அதைத்தான் விரலில் மாட்டிக் கொண்டார். சிறிது காலத்திற்குப் பின் அந்த அரசருக்கு ஒரு சோதனை வந்தது.

அயல் நாட்டு மன்னன் படையெடுத்து வந்தான். அவன் இவரிடம் ஏற்கனவே தோற்றுப் போனவன். இப்போது ஒரு வெறியில் வந்தான். வெற்றி பெற்றுவிட்டான். இவர் தன் நாட்டை இழந்தார். எல்லாவற்றையும் இழந்தார். அடிபட்ட ஒரு குதிரையில் ஏறித் தப்பிச் சென்றார். அவரைப் பகைவர்கள் பின்னால் துரத்தினார்கள்.

இவர் மலையுச்சிக்குச் சென்றுவிட்டார். அதற்கும் அப்பால் போக முடியாது. மிகவும் பள்ளமான இடம் அது. உல்லாசப் பயணிகள் வந்து கண்டு களிக்குமிடம். ஆனால் இவருக்கு அந்த இடம் மரணப் பயத்தின் வாசல்.

இங்கிருந்து திரும்பவும் முடியாது. அவ்வளவு குறுகலான பாதை அது. வேறு வழியே இல்லை.

உடனே இவருக்கு மோதிரத்தின் அடியில் வைத்த வாசகம் நினைவுக்கு வந்தது. மோதிரத்தைத் திறந்து படித்தார். அதில், "இந்த நிலையும் மாறிவிடும்! (This too will pass a way) என்ற வாசகம் இருந்தது.

அதைப் படித்ததும் மன்னருக்குத் தைரியம் வந்துவிட்டது. இவரைத் துரத்திக் கொண்டு பின்னால் வந்த பகைவர்களும் திசைமாறிச் சென்று விட்டனர்.

'அவர்கள் என்னைத் துரத்தி வராவிட்டால் இவ்வளவு அழகான ஓர் இடம் இருப்பதே எனக்குத் தெரியாமல் போயிருக்குமே' என்று அரசர் நினைத்தார்.

'இந்த அழகை ரசிப்பதற்கு ஒரு நாட்டையே இழக்கலாம்' என்று அவருக்குத் தோன்றியது.

அமைதியாக இருந்து அந்த அழகான இடத்தை ரசித்தார்.

எதிரிகள் அனைவரும் எங்கேயோ போய் விட்டார்கள்.

மன்னர் நாடு திரும்பினார். மீண்டும் படைகளைத் திரட்டினார். சிறிது காலத்திற்குள் படையெடுத்துச் சென்றார். யாரிடம் தோற்றாரோ அவரையே வெற்றிகண்டு தலைநகருக்குத் திரும்பினார்.

வரவேற்புவிழா பிரமாண்டமாக இருந்தது. ஆடல், பாடல், கோலாகலம்... அவற்றைப் பார்த்ததும் அரசருக்குத் தலைகால் புரியவில்லை...

"நம்மை யாராலும் ஜெயிக்க முடியாது என்று நினைத்தார். அகம்பாவம் அவரிடம் லேசாக எட்டிப் பார்த்தது.

இப்போது சூரிய ஒளிபட்டு மோதிரம் மின்ன ஆரம்பித்தது. அரசர் மறுபடியும் அதைத் திறந்து பார்த்தார். 'இந்த நிலையும் மாறிவிடும்' என்று அதில் எழுதியிருந்தது.

அவ்வளவுதான் மனம் அடங்க ஆரம்பித்தது. ஆணவம் நீங்கியது. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா? எந்தச் சூழ்நிலையிலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் இங்கே எதுவும் நிரந்தரமில்லை.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் II 'ஆ' பிரிவுக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு 857, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் கருத்து விடுவிக்கப்பட்டு யாழ் மாவட்டத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க முடியும்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிப்போர்,

⌘ பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதி, புகைப்படப்பிரதி

⌘ கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதி, புகைப்படப்பிரதி

⌘ தேசிய அடையாள அட்டை, புகைப்படப்பிரதி.

⌘ 10.08.2009க்கு முன்னர் ஆறு வருட காலப்பகுதியில் குறைந்தது மூன்று வருடங்கள் வடமாகாணத்தில் வசித்தமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

⌘ கிராம அலுவலரின் நற்சான்றிதழ் ஆகிய ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் புதிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க முடியும் எனவும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி பொ. சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீகாந்தா குகதீப் (கரணவாய் கிழக்கு), சிவலிங்கம் சிந்துஜா (கோண்டாவில் கிழக்கு), சிவகுருநாதன் மாலினி (திருப்பதி, பெரிய தோட்டம், கரவெட்டி) மதி (கரவெட்டி), வின்சன்ட் குணாளன் வின்சன்ட் ஞான தயாளன் (பண்டத்தரிப்பு), சிவலிங்கம் சிவகௌரி (கரணவாய் கிழக்கு), வடிவேல் கிருஷாந்தி (வ.மாகாணக் கல்வித் திணைக்களம்), கருணாநிதி சரண்யா (கரணவாய் தெற்கு), அமலதாஸ் கோபிராஜ் (கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்).

சின்னையா காயத்திரி (வரணி), சீவரெட்ணம் டினேசன் (அல்லாரை வடக்கு), சிதம்பரநாதன் ஆரதி (சங்கரத்தை), சுரேரஞ்சன் சஜித்தா (நெல்லியடி, கரவெட்டி), இரத்தின சிங்கம் கஜேந்திரன் (அரியாலை மேற்கு), தாமோதரம்பிள்ளை தவமன்னன் (தொல்புரம் கிழக்கு), இளையதம்பி இலங்கேஸ்வரன் (ஆரையம்பதி, மட்டக்களப்பு), சின்னத்துரை திலீபன் (மாரியம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி).

நவரெட்ணம் நவதாசன் (வடமாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு), கனேசராஜா பரணிரூபன் (நீர்வேலி வடக்கு), மயில்வாகனம் கபிலன் (இணுவில் மேற்கு), சாம்பசிவம் ரட்சிகா (திருநெல்வேலி தெற்கு), சந்திரலிங்கம் சுவர்ணன் (புலோலி தெற்கு), தேவராசா வேணுகோபாலன் (வண்ணார்பண்ணை கிழக்கு).

சோதிலிங்கம் அருட்செல்வன் (கெருடாவில் தெற்கு), சின்னத்துரை சுதர்ஜன் (கரவெட்டி கிழக்கு), கனகலிங்கம் கோபிகா (மருதடி மேற்கு, சாவகச்சேரி), சிறீதரன் மனஸ்வினி (கோண்டாவில் கிழக்கு), பத்மநாதன் சஞ்சீவன் (கோப்பாய் வடக்கு), சுந்தரலிங்கம் சதீசன் (சரசாலை வடக்கு), தேவராஜா லக்சன் (கொக்குவில் கிழக்கு), வைத்தியானந்த ஐயர் சரவணன் (கொக்குவில் கிழக்கு), இரவீந்திரகுமரன் சங்கீதா (மொறட்டுவ), இம்மானுவேல் யேசுரட்ணம் ஒஸ்மன் ஜெரி (மிருசுவில்), தங்க ராஜா பிரபாகரன் (மே/பா எஸ். கிரிதரன் கல்வியங்காடு), பாலச்சந்திரன் பிரசன்னா (நீராவியடி, யாழ்ப் பாணம்).

வல்லிபுரம் நிதர்சன் (உரும்பிராய் மேற்கு), இராஜதுரை வசந்தன் (மட்டுவில் வடக்கு), சிவயோகநாதன் குகாயினி (நீர்வேலி வடக்கு), இராஜரட்ணம் வேல்குமார் (இணுவில், மானிப்பாய்), செபஸ்தியாம்பிள்ளை ஏசுராணினி (சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்), நிசாந்தன் கிரிஜா (மே/பா திரு. ஏ. மகேந்திரன், சங்கரத்தை).

தங்கராசா கண்ணதாசன் (சுளிபுரம்), பாலேந்திரன் மயூரி (பருத்தித்துறை), சஞ்சீவ் கொன்சி அருளினி (நல்லூர்), உபேந்திரன் சுதர்சினி (சங்கானை), சத்தியசீலன் விண்டா திவ்யானந்தி (நவாலி தெற்கு), தம்பிராஜா தனுஷன் (நெடுந்தீவு மேற்கு), துரைக்கிளி இந்திரவதனா (வல்வெட்டி), சற்குணசிங்கம் பிரேமிலன் (சுன்னாகம்), பாலேந்திரன் வாசீசன் (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு).

வன்னியசிங்கம் சுகிதரன் (வடமாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு), தாம்குலசிங்கம் சுதாகர் (நல்லூர்), கந்தசாமி துளசி (நீர்வேலி மத்தி), சதானந்தன் குமாரதாஸ் (திருநெல்வேலி), பற்றிக் துரைராஜா ரோய் டனிஸ்டன் (பண்டத்தரிப்பு), துரைராசா சிவரூபன் (கரவெட்டி மத்தி).

### மேலதிகமாக அழைக்கப்பட்டோர்

யோகராஜா நித்தியா (நல்லூர்), நாகலிங்கம் குமனதாசன் (அரியாலை மேற்கு), சிவனந்தன் அருணோதயன் (வைமன் வீதி, நல்லூர்), சங்கலிங்கம் பிருந்தாமலர் (கோப்பாய் மத்தி), கணேஸ் சுரேஸ்பாபா (சங்கானை மேற்கு), ஜெகநாதன் அகிலரூபி (மானிப்பாய் கிழக்கு), தங்கராஜா கஸ்தூரி (ஆவரங்கால் கிழக்கு), குணரெட்ணம் நிசாந்தன் (கோவில் வீதி, நல்லூர்)

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராசி பலன்

19.11.2009
(கார்த்திகை 03 புதன்கிழமை)
திருதியை பின்னிரவு 3.54 மணிவரை
கேட்டை முற்பகல் 9.32 மணிவரை
இராகுகாலம் 1.39-3.09 மணிவரை
சுபநேரம் 7.39-9.09 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | புதிய முயற்சி, உத்தியோக பங்கம், ஆரோக்கியக்குறைவு, திடீர் பயணம். |
| இடபம் | வீண்பகை, ஆரோக்கியக்குறைவு, மரியாதைக்குறைவு, போசன சுகம். |
| மிதுனம் | களஸ்திர நன்மை, செல்வாக்கு, காரிய அனுகூலம், திடீர் பயணம். |
| கடகம் | பணவரவாய், சத்துரு ஜெயம், உற்சாகம், முயற்சி கைகூடும். |
| சிங்கம் | காரிய இடையூறு, சிறுவியாதி, தனவிரயம், வியாபார நன்மை. |
| கன்னி | பயந்த சுபாவம், தொழில் நன்மை, தேவையற்ற உறவு, அதிக பிரயாசை. |
| துலாம் | இனிய சம்பவம், வாக்கு மேன்மை, பிரயாண சுகம், பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | விவாதம், அதிக செலவு, முயற்சி தாமதம், உஷ்ண நிலை. |
| தனுசு | நல்ல முயற்சி, சயன சுகம், விருந்துபசாரம், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | பிதா சிந்தை, பெரியோர் உதவி, காரிய அலைச்சல், சுபசெலவு. |
| கும்பம் | தொழில் நன்மை, பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி, புதிய திருப்பம். |
| மீனம் | சுபநிகழ்வு, உற்சாகம், நண்பர்கள் உதவி, போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 110 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 |
| தக்காளி | 100 | 120 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 60 |
| கரட் | 60 | 80 | 85 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 75 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 70 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 35 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 80 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 140 |
| லீக்ஸ் | 140 | 150 | 120 |
| பீற்றூட் | 60 | 70 | 80 |
| கறிமிளகாய் | 90 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 50 | 60 | 110 |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | -- | 220 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30-35 | 35 |

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

2,11,20,29 ஆகிய திகதி ஒன்றில் பிறந்தவராக இருப்பின் அவர் பிறந்த எண் 2 என்று அறிவோம்.

## உடல் எண் : 2 விதி எண் : 1

### உடலமைப்பு

பிறந்த எண் 2, உயிர் எண் 1 ஆகக் கொண்டவர்கள் சந்திரன், சூரியன் ஆகிய இருவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள். இவர்கள் நடுத்தர உயரமுள்ளவர்களாகவும், பார்ப்பதற்கு அழகாகவும், கவர்ச்சியுடனும் இருப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் மன சலனமுள்ளவர்களாக இருப்பர். ஒரு சமயம் இருப்பது போன்று மறு சமயம் இருக்கமாட்டார்கள். பிறர் மனத்திலுள்ளதை ஊகித்தறியும் ஆற்றல் இவர்களிடம் காணப்படும்.

இவர்கள் யாரிடமும் மனம் விட்டுப் பழக மாட்டார்கள். குறிப்பிட்ட சிலரிடம் தான் நட்புக் கொள்வர். பழகிய பின்பு அவர்களுக்காக எதையும் தியாகம் செய்யத் துணிவர். அந்த அளவுக்கு உண்மையான அன்பு செலுத்துவர். இவர்களிடம் கடவுள் பக்தி மிகுந்திருக்கும்.

இவர்கள் சில சமயங்களில் காரணமின்றி மனக் குழுப்பத்துக்கு ஆளாக நேரும். இவர்களுக்கு தான் எப்படியாவது முன்னேற வேண்டும் என்ற துடிப்பு இருந்துகொண்டே இருக்கும். அதற்காக வேகமாகச் செயல்படவும் செய்வர். இருந்தாலும் இடையில் சஞ்சலத்துக்கும் உள்ளாவர்.

இவர்களுக்கு துன்பம் நேரும்போது உதவ பலர்தாமே முன் வருவர். இவர்கள் எப்போதும் கணக்கிட்டு சிக்கனமாகவே செலவு செய்வர். எப்போதும் எதையாவதொன்றைப் பற்றிச் சிந்தித்த வண்ணமிருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு இளமையிலேயே பெற்றோரின் சுகம் கெட நேரும். பெற்றோருக்கு தோஷம் ஏற்படுவதோ அல்லது ஜாதகரைப் பெற்றோர் நிராகரிக்கவோ செய்வர். பொதுவில் அவர்களின் அரவணைப்பில் வளர்ந்தவராக இருக்கமாட்டார்.

இவர்களுக்கு குடும்ப வாழ்க்கையும் அவ்வளவு சோபிப்பதில்லை. பிரச்சினைகள் நிறைந்தும், மனம் விரக்தி கொள்ளும்படியும் இருக்கும். புத்திர பாக்கியத்திலும் குறை காணப்படும். அதனால் தனிமையை நாட வேண்டி வரும்.

### தொழிலும் வருமானமும்

இவர்களில் பலர் மத்திய மாநில அரசில் பணிபுரிந்து வருவர். அது தவிர ஆடம்பரமான பொருட்கள் தயாரிக்கும் அல்லது விற்பனை புரியும் நிறுவனங்களில் பணிபுரிபவர்களாகவும் இருப்பர். நெருப்பு, இரும்பு தொடர்புடைய தொழில்களிலும் இத்தகையவர்கள் சிறப்புறுவர்.

கலை தொடர்பான சங்கீதம், ஓவியம், சித்திரம் தீட்டுத்தல் போன்றவற்றிலும் சட்டத் துறை மற்றும் மருத்துவத் துறைகளில் கூட இவர்கள் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

இவை தவிர, விவசாயம், பச்சை நிறப் பொருட்கள் தயாரித்தல், விற்பனை செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிப்பர்.

இவர்கள் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் அதில் முன்னேறி லாபம் பெறுவர். வீடு, நிலம், சொத்து வாங்கும் அளவுக்கு வாய்ப்பும் பெறுவர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண மிகுதியால் மூல நோய், இரத்த அழுத்தம், கண் நோய் போன்றவை ஏற்படும். கட்டி போன்ற சரும நோய்களும் ஏற்படக்கூடும். அதைத் தவிர, காச நோய் போன்ற நோய்கள் ஏற்படும. சித்தப் பிரமை ஏற்படவும் வாய்ப்பு உள்ளது.

### சாதக பாதக எண்களும் திகதிகளும்

இவர்களில் சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற 6 தொடர்புடைய எண்கள்கூட சிலருக்குப் பொருந்தும்.

1,6,7 தொடர்புடைய எண்களும் யோகமளிக்கக்கூடியவை.

ஆனால் இவர்கள் சூரியன், சந்திரன் தொடர்புடைய 1,2 ஆகியவற்றில் தம் பெயரை வைப்பது நல்லதல்ல, அத்துடன் 8,9 ஆகிய சனி, செவ்வாய் தொடர்புடைய எண்களும், திகதியும் யோகமற்றவை.

## உடல் எண் : 2 விதி எண் : 2

### உடலமைப்பு

உடல் எண், உயிர் எண் இரண்டுமே 2 ஆகக் கொண்டவர்கள் சந்திரனின் முழு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் என்று கூறலாம். இவர்கள் சற்று உயரம் குறைந்தவர்களாக இருப்பர். ஆனால் அதிக குள்ளமானவர் என்று கூறிவிட முடியாது! அழகாகவும், கவர்ச்சியாகவும் தோற்றமளிப்பர்.

### மன குணவியல்பு

இவர்கள் மனம், சலனமடைவதாக இருக்கும். இவர்கள் ஒரு சமயம் நினைப்பதை மறு சமயம் மாற்றிக் கொள்வர். அடிக்கடி மாறும் மனவியல்பு கொண்டவர்களாக இருப்பர்.

இவர்கள் மனம் இளகியது. பிறர் கஷ்டப்படுவதைக் கண்டு பொறுக்க மாட்டார்கள். வலியச் சென்று உதவி புரிவர். அத்துடன் இவர்களிடம் பிடிவாத குணமும் இருக்கும். யார் தடுத்தாலும் தன் பிடிவாத குணத்தை தளர்த்தமாட்டார்கள்.

அதனால் இவர்கள் பல உதவிகள் செய்பவராக இருந்தாலும் நல்ல பெயர் வாங்க முடியாது. விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம் இவர்களிடம் இருப்பதில்லை.

இவர்களின் மனம் இயற்கையை ரசிப்பதில் லயிக்கும். அதைப் போல தகாத காரியங்களில் ஈடுபடுத்தவும் செய்யும். அந்த அளவுக்கு மனக்கட்டுப்பாடு இவர்களிடம் இல்லாததால் பல கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அளாகி கடைசியில் அவதிக்குள்ளாக நேரும்.

எதையும் முன்பின் யோசித்துச் செய்ய மாட்டார்கள். எதையாவதொன்றை அவசரமாக செய்துவிட்டு அதனாலும் வேதனைக்குள்ளாக நேரும். இவர்கள் மனத்திலுள்ளதை எவராலும் புரிந்து கொள்ள முடியாது. தன் வேதனைகளைக்கூட யாரிடமும் வெளியிட மாட்டார்கள். தம்முள்ளேயே புழுங்குவர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களின் குடும்ப வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகள் இருந்த வண்ணமிருக்கும். இவர்களின் பிடிவாதத்தாலும், சலன புத்தியாலும் தம் அமைதியைத் தாமே கெடுத்துக் கொள்வர். குடும்பத்தில் குழப்பங்களும் வேதனைகளும் மிகுந்திருக்கும். அதிக காம வேட்கை கொண்டவர்களாக இருப்பர். அதனாலும் அமைதியான வாழ்க்கை அமைவது கடினம்.

### தொழிலும், வருமானமும்

இவர்களுக்கு பச்சை நிறப் பொருட்கள் லாபம் தருவதாகும். விவசாயத் துறையில் சிறப்புப் பெறுவர். விவசாயம் செய்து விவசாயப் பொருட்களை வாங்கி விற்றல் அல்லது விற்கும் தரகராகவும் இருப்பது நன்மையாகும்.

அழகு சாதனப் பொருட்களைத் தயாரித்தல் அல்லது வியாபாரம் செய்யவும் கூடும். அது தொடர்பான நிறுவனங்களில் பணிபுரிபவராகவும் இருப்பர். சிலர் மத்திய மாநில தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவராகவும் இருப்பர்.

இவர்கள் ஈடுபட்டிருக்கும் தொழிலில் இலாபமும் பொருள் சேர்க்கையும் பெற்றுத் திகழ்வர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண மிகுதியால் அம்மை, கட்டி, மூலம், இரத்தக் கொதிப்பு போன்றனவும், சரும சம்பந்தமான நோய்களும் வரலாம். இவர்கள் பெண்கள் பலரிடம் தொடர்பு கொண்டவராக இருப்பர். அதனால் பால்வினை நோய்களுக்கு ஆளாகவும் கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் 7,6 போன்ற கேது, சுக்கிரன் ஆதிக்கத்திலான எண்களில் யோகமானவற்றில் தம் பெயரை அமைத்துக் கொள்ள அதிர்ஷ்டமாக இருக்கும். தம் நிறுவனங்களுக்கும் இதுவே யோகமானது.

இவர்களின் யோகமான எண்கள் கூட 7,6ம் தான். இவர்களுக்கு யோகமான திகதிகள் கூட 7,6 தொடர்புடையதே.

இவர்களுக்கு செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்ட 9 ஆம் அது தொடர்பான எண்களும் யோக மற்றவை. அது தொடர்பான திகதியும் நல்லதல்ல. (தொடரும்)

---

# கருணாவுக்கு வழங்கப்படுகின்ற மனித உரிமை கூட அங்கு வாழ்ந்த பொதுமக்களுக்கு வழங்கப்படுவதில்லை

## ஜே.வி.பி. (பா.உ) சுனில் ஹந்துன் நெத்தி

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட 2 ஆம் ஆண்டு மாணவி பயங்கரவாத புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்பட்டதனை ஜே.வி.பி. வன்மையாக கண்டிக்கிறது. அந்த மாணவி பிரபாகரனிடம் சான்றிதழ் பெற்றமைக்காக விசாரணைக்கு உட்படுத்தப்படுவராயின் மஹிந்த ராஜபக்ஷவினால் அவருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்காகவும் அவரை விசாரணைக்கு உட்படுத்தல் வேண்டும் என்று ஜே.வி.பி கோரியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் பிறந்து பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் 2 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் இராசையா துவாரகா என்ற மாணவி பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார் இந்த சம்பவத்தை ஜே.வி.பி. வன்மையாக கண்டிக்கின்றது.

பிரபாகரனின் முத்திரை குத் தப்பட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் இருந்ததை அடுத்து அந்த மாணவியை விசாரணைக்கு உட்படுத்துவதற்காக கைது செய்யப்பட்டுள்ளதாக அறிகின்றோம்.

அவ்வாறாயின் அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் வெற் றியீட்டியமைக்காக அன்றைய பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவினால் அவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது தொடர்பிலும் விசாரிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் இரண்டாவது தளபதி இன்று அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கின்றார். கருணாவும் மேஜர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும் சுதந்திரக்கட்சி மாநாட்டில் கைகோத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும் கிளிநொச்சியில் பிறந்து அங்கேயே வளர்ந்து பிரபாகரனின் நிர்வாகத்தின் கீழ் இருந்தமையால் ஓர் விளையாட்டு வீராங்கனை கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடக்கவிருந்த விளையாட்டுப் போட்டியில் அவர் பங்குபற்றவிருக்கின்ற நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். அவர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலவில்லை. பேராதனையிலேயே பயின்றுள்ளார் அது தவறானது அல்ல.

பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுத்ததன் சான்றாக அவரை சகல துறைகளிலும் திறமை மிக்கவளாக உலகிற்கு காண்பிக்க வேண்டும்.

கிளிநொச்சியில் பிறந்தால் அங்குதான் வாழ வேண்டும். பிரபாகரனின் நிர்வாகத்தில் தான் இருக்க வேண்டும். அது தவறல்ல. புலிகளுக்கு ஆட்களை திரட்டிய கருணாவிற்கு வழங்கப்படுகின்ற மனித உரிமைகள் கூட அங்கு வாழ்ந்த சாதாரண பொதுமக்களுக்கு வழங்கப்படுவதில்லை.

அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்காது இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமாகவே இனங்களுக்கிடையில் நம்பிக்கையை கட்டியெழுப்பலாம். (ஓ-6)

---

# வவுனியாவில் படுகொலை சம்பவங்களுடன் தொடர்புடைய கும்பல் கைது

(கொழும்பு)

வவுனியா பிரதேசத்தில் பல்வேறு படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஐந்து பேரைக் கொண்ட கும்பல் ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் வவுனியா பிரதேசத்தில் ஐந்து படுகொலையைச் சம்பவங்களை மேற்கொண்டுள்ள தாகவும் ஐந்து கப்பம் கோரல் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகவும் 70 க்கும் மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் பாடசாலை மாணவன் ஒருவனை கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது இந்த விடயங்கள் அம்பலப்பட்டுள்ளது.

குறித்த கடத்தல் கும்பலிடம் பல்வேறு ஆயுதங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

முன்னேற்றகரமான வாழ்க்கைக்கு பாதை அமைத்து தரும் வழிகாட்டி–புத்தகங்கள்–பத்திரிகைகள்.

– ஓர் அறிஞர்

வலம்புரி

## வேலைவாய்ப்புக்களை அறிய முடியாத யாழ்ப்பாண இளம் சமூகம்

அரச சார்பு மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்களை கோரி வருகின்றன.

அதிலும் தற்போதைய சூழமைவில் அரச வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

இருந்தும் வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கும் தகவல்களை யாழ். குடாநாட்டு இளம் சமூகம் அறிய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இதற்கான அடிப்படைக் காரணம் பத்திரிகை வாசிக்கும் பழக்கம் இளம் சமூகத்திடம் அறவே இல்லாது இருப்பதாகும்.

பத்திரிகை வாசிக்கும் பழக்கம் மாணவ பருவத்தில் எழுகை பெறவேண்டும். எனினும் தற்போதைய கல்வி முறைமை மற்றும் ஓய்வு நேரங்களை முற்று முழுதாக ஆக்கிரமித்துள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் பத்திரிகை வாசிப்பிற்கான சந்தர்ப்பங்களை தடைசெய்துள்ளன எனலாம்.

இவை யாவற்றுக்கும் மேலாக மாணவப் பருவத்தில் இயல்பாக ஏற்பட்டுள்ள பத்திரிகை வாசிப்பில் உள்ள வெறுப்பு அவர்களின் எதிர்காலத்தை மிக மோசமாக பாதிக்கின்றது.

பத்திரிகை மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களை தேடி வாசிப்பதன் மூலம் பல வேலைவாய்ப்புக்களுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்கள் நிறைய ஏற்படும். இதன் மூலம் இலகுவாக வேலையில் இணைந்து கொள்ளமுடியும்.

ஆனால், யாழ்ப்பாணத்தின் இளம் சமூகம் வேலை வாய்ப்பு தம்மை தேடிவர வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

தகவல் தொழில் நுட்ப அறிவும் ஆங்கில மொழியின் உலகளாவிய ஊடறுப்பும் வேகம் கொண்டிருக்கும் நிலையில் யாழ்ப்பாண இளைஞர்கள் தங்களை நாடி வேலை வருமென காத்திருப்பது எத்துணை தவறென்பது புரிந்து கொள்ளுதற்குரியது.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழமைவில் வேலை வாய்ப்பு என்பது மிகவும் அவசியமானது. அதிலும் இளம் வயதினர் வேலை செய்ய வேண்டியது கட்டாயம்.

அதே சமயம் வேலை வாய்ப்பின் நுழைவு இன்னொரு வேலைக்கான திறவு கோலாகவும் அமைகின்றது.

ஆகவே யாழ். குடா நாட்டு இளம் சமூகம் வேலைவாய்ப்பினை அறிவதிலும் காலம் தாழ்த்தாது அதற்கு விண்ணப்பிக்கவும் பழகிக் கொள்ள வேண்டும்.

கல்வி–வேலை–வேலையினூடாகக் கற்றல் என்ற செயலொழுங்கில் இணைந்து கொள்வதற்கு யாழ்ப்பாண இளம் சமூகத்தை வழிப்படுத்த புத்திஜீவிகள் முன்வருவது அவசியம்.

வேலைவாய்ப்புக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ள தகவல்களை அறியாமலே தவறிப் போகின்ற பரிதாப நிலையில் இருந்து இளம் சமூகம் விடுபட உதவுவோம்.

# விளம்பரப் பலகைகளை நாட்டுவதற்கு மாநகரசபையின் அனுமதி அவசியம்

## முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பதாகைகள், விளம்பரப் பலகைகள் என்பவற்றை நாட்டுவதற்கு யாழ். மாநகர சபையின் அனுமதி பெறப்பட வேண்டும். அவ் அனுமதி ஒரு வருடத்துக்கே செல்லுபடியாகும் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

யாழ். மாநகர சபை எல்லைக்குள் பதாகைகள், விளம்பரப் பலகைகளை நாட்டுவதற்கு யாழ். மாநகர சபையின் அனுமதி பெற்றப்பட வேண்டும்.

அனுமதி பெறுவதற்கு முன்னதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை ,வீதி அபிவிருத்தித் திணைக்களம், புகையிரதத் திணைக்களம் மற்றும் கமநல சேவைத் திணைக்களம் என்பவற்றின் ஒப்புதல் பெறப்பட்டு அவற்றை மாநகர சபையில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டும்.

அங்கீகாரம் பெறப்பட்டு மூன்று வாரங்களுக்குள் குறிப்பிட்ட இடத்தில் விளம்பரப் பலகை நிர்மாணிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நிர்மாணிக்கப்படாத சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட அனுமதி இரத்துச் செய்யப்படும்.

இதேவேளை விளம்பரப் பலகைகள் நிர்மாணிக்கப் பட்டதில் இருந்து ஒரு வருடத்திற்கே மாநகர சபையினால் வழங்கப்பட்ட அனுமதி செல்லுபடி ஆகும் எனவும் அதன் பின் அனுமதி புதுப்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

உரிய அனுமதியைப் பெறாது நாட்டப்படும் விளம்பரப் பலகைகள் மாநகர சபையினால் அகற்றப்படும் எனவும் மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

யாழ் மாநகர சபை பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விளம்பர பதாகைகள் மாநகர முதல்வரின் விசேட பணிப்பின் பேரில் அகற்றப்பட்டு வருகின்றன. (ச)

# முல்லை. வைத்திய நிறுவனங்களில் கடமை ஆற்றியோருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனைக் குட்பட்ட வைத்திய நிலையங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அங்கு கடமையாற்றிய அனைவரையும் உடனடியாக கடமைக்குத் திரும்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வைத்திய நிலையங்கள் கடந்த மாதம் 22ஆம் திகதியிலிருந்து மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட நிறுவனங்களில் தற்காலிக இணைப்புப் பெற்று தற்பொழுது கடமைபுரியும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரிவுக்குட்பட்ட வைத்திய நிலையங்களில் கடமைபுரிந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தாம் தற்போது தற்காலிகமாக கடமைபுரியும் நிலையங்களிலிருந்து விடுப்புக் கடிதத்தினை உடனடியாகப் பெற்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு சமுகமளிக்கவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## எந்தத் தேர்தலாயினும் முகங்கொடுக்க தயாராக வேண்டும்

### கட்சியினருக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

உத்தேச தேர்தல்களின் பொருட்டு அனைத்து செயற்பாடுகளையும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி நேற்று முன் தினம் தமது கட்சியினருக்கு அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களிடையேயான கலந்துரையாடலின் போது அவர் இந்த அறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.

எனினும் இந்த கூட்டத்தின் போது முதன் முதலில் நடைபெறவிருக்கும் தேர்தல் குறித்து அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டபோதும் இவ்வாறான எந்த வித தகவல்களும் வெளியிடப்படவில்லை.

எவ்வாறாயினும் விரைவில் அது தொடர்பான அறிவித்தலை ஜனாதிபதி வெளியிடுவார் என கலந்துரையாடலில் இணைந்து கொண்ட அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வருடாந்த மாநாட்டின் போதும் கட்சியின் ஆதரவாளர்கள் ஜனாதிபதியிடம் இந்த வேண்டுகோளை விடுத்திருந்ததாகவும் அவர் நினைவூட்டினார்.

எந்த தேர்தலாயினும் அதற்கு முகங்கொடுக்க தயாராக வேண்டும் என ஜனாதிபதி கட்சியின் பிரமுகர்களுக்கு பணித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

### மக்கள் உண்ண உணவின்றி தவிக்கும் போது

## கட்சியின் சின்னத்துடன் கூடிய ஆயிரம் ரூபா நாணயத்தாள் வெளியீடு

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் மூன்று வேளை உணவின்றி தவிக்கும் போது ஜனாதிபதி கட்சியின் சின்னத்துடன் கூடிய் ஆயிரம் ரூபா நாணயங்களை வெளியிடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல அடிக்கடி கூறிய போதிலும் குறைந்த விலையில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மேலும் 5 கட்சிகள் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிட ஒருவர் இணக்கம் வெளியிட்டுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறியுள்ளார். (ஓ-6)

# நீ உலகில் இருந்து கடமைகளைச் செய் உன் இதயத்தில் இறைவன் குடிகொள்ளட்டும்

படகு உள்ளது படகைத் தண்ணீரில் எவ்வளவு காலமும் வைத்திருக்கலாம். தவறில்லை. ஆனால் நீர் படகினுள் புகுந்து விட்டால் படகு கவிழ்ந்து விடும். எவ்வளவு நீளமான படகாயினும் அது நீர் மேல் மிதக்கிறது.

ஆனால் தண்ணீர் உள்ளே நுழைந்ததும் படகு கவிழ்ந்து விடும். உலக வாழ்க்கையில் ஈடுபடு. தவறொன்றுமில்லை. வாழ்க்கையை அனுபவி தவறில்லை. ஆனால் உலக சம்பந்தமான உணர்வுகளை இதயத்தில் தேக்கி வைத்துக்கொள்ளாதே. நீ கவிழ்ந்து விடுவாய்.

நீ உலகத்தில் இருந்து கொண்டு உன் கடமைகளைச் செய். குடும்பத்தைப் பராமரி, வியாபாரம், தொழில், அலுவலக வேலை எல்லாவற்றிலும் ஈடுபடு தவறில்லை. ஆனால் அவையெல்லாம் ஓர் அளவில் இருக்கட்டும். அவற்றின் உணர்வுகள் தேங்கலாகாது. உன்னிடம் இருக்கும் ஒரே இதயத்தில் இறைவன் குடி கொள்ளட்டும்.

உடலைக் கொண்டு என்னவேண்டுமானாலும் செய். அப்போது வேலை வழிபாடாக உயர் மாற்றம் அடையும். உறுதியான நம்பிக்கைகளின் அடிப்படையில் சண்டையிடுதல் அறிவற்ற செயல். அன்பில்லாதபோது உறுதியான நம்பிக்கையை எவ்வாறு வளர்த்துக்கொள்வாய்?



திருமணம் நடக்கிறது. அன்ப பெருகுகிறது. அதற்குப் பிறகே உறுதியான நம்பிக்கை வளர்கிறது. நம்பிக்கையை உறுதி செய்த பிறகுதான் அன்பு கொள்கிறாயா? அது சரியல்ல. முதலில் அன்பு செலுத்துகிறாய். நம்பிக்கை உறுதிப்படாத போதும் அன்பு பெருகுகிறது. தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் அன்பின் குறைவே தவிர உறுதியான நம்பிக்கையின் குறையல்ல. அன்புகாரணமாகதிருமணம் நடந்தது. நம்பிக்கையுறுதி குறைந்ததன் காரணமாக திருமணம் விவாகரத்தில் முடிந்தது. அன்பு முதலில் உறுதியான நம்பிக்கை பிறகு.

ஜெய்சாயீராம் யாதவன்






. பேராசிரியர் க.கைலாசபதியின் நினைவுப்பேருரை நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலைப்பீடாதிபதி கே.குகபாலன் மங்கள விளக்கேற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி என்.சண்முகலிங்கம் தலைமையுரையாற்றுவதையும், பாண்டிச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவனத்தின் மானிடவியல் பேராசிரியர் முனைவர் பக்தவத்சலபாரதி நினைவுப் பேருரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## யாழ்.மாவட்ட பாடசாலைகளில்

# மீளக்குடியமர்ந்த 11 ஆயிரத்து 19 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்

(அல்வாய்)

வவுனியா மற்றும் யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களிலிருந்து மீளக்குடியமர்ந்தவர்களில் இதுவரை 11 ஆயிரத்து 19 மாணவர்கள் யாழ்.மாவட்ட பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்.வலயத்தில் 2ஆயிரத்து 400 மாணவர்களும், தென்மராட்சி வலயத்தில் ஆயிரத்து 617 மாணவர்களும், தீவக வலயத்தில் 2ஆயிரத்து 382 மாணவர்களும், வடமராட்சி வலயத்தில் 2ஆயிரத்து 150 மாணவர்களும், வலிகாமம் வலயத்தில் 2 ஆயிரத்து 470 மாணவர்களும் இணைந்துள்ளனர்.

இம்மாணவர்களுக்கான இலவச சீருடைகளை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் தங்கள் வலலயத்தினூடாக பெற்றுக்கொடுத்துள்ளதுடன் இலவச பாடநூல்களை வழங்குவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பாதணி, கற்றல் உபரகரணங்கள் போன்றவற்றை தொண்டு நிறுவனங்களூடாக பெற்றுக்கொடுக்கவும் மேலும் சில பாடசாலைகளில் யுனிசெவ் அனுசரணையுடன் தற்காலிக வகுப்பறைகள் அமைக்கவும், அவ்வவ் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் இருந்து வருகை தந்த 503 ஆசிரியர்கள் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு பெற்றுள்ளனர்.

இவர்களில் யாழ்.வலயத்தில் 160 ஆசிரியர்களும், தென்மராட்சி வலயத்தில் 38 ஆசிரியர்களும் தீவக வலயத்தில் 41 ஆசிரியர்களும் வடமராட்சி வலயத்தில் 117 ஆசிரியர்களும் வலிகாமம் வலயத்தில் 147 ஆசிரியர்களும் இணைந்துள்ளனர்.

மேலும் இவர்களுடன் ஏற்கனவே அனர்த்தங்கள் நடைபெற்ற மாவட்டங்களிலிருந்து 793 ஆசிரியர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் யாழ். வலயத்தில் 240 ஆசிரியர்களும், தென்மராட்சி வலயத்தில் 114 ஆசிரியர்களும், தீவக வலயத்தில் 45 ஆசிரியர்களும், வடமராட்சி வலயத்தில் 140 ஆசிரியர்களும் வலிகாமம் வலயத்தில் 254 ஆசிரியர்களும் இணைந்துள்ளனர்.

தற்காலிக இணைப்புப் பெற்ற 503 ஆசிரியர்களும் ஏற்கனவே இணைப்புப் பெற்ற 793 ஆசிரியர்களும் மாகாணக் கல்வியமைச்சு அழைக்கும் போது தத்தம் பாடசாலைகளுக்கு செல்லத் தயாராக இருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மீளக்குடியமர்வு நடைபெற்ற மடுப்பிரதேசத்தில் 11 பாடசாலைகளில் 1500 மாணவர்கள் கல்வி நடவடிக்கையை தொடர்கின்றனர். இவர்களுக்கு 68 ஆசிரியர்களே கல்வி கற்பிக்கின்றனர். அத்துடன் கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் 9 பாடசாலைகளில் 410 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

துணுக்காய் பிரதேசத்தில் 19 பாட சாலைகளும் இயங்குகின்றன. இப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் பெரும்பற்றாக்குறையாக உள்ளது.

இதனை சீர் செய்யும் பொருட்டு வட மாகாண கல்வியமைச்சு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை ஏற்கனவே இணைப்பு பெற்ற கிளிநொச்சி, துணுக்காய், மடு பிரதேச ஆசிரியர்கள் ஜனவரி மாதம் 2ஆம்திகதி பாடசாலை ஆரம்பிக்கும் போது தங்களுடைய பாடசாலைக்கு செல்லத்தயாராக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இணைப்புப் பெற்றவர்களுக்கும் நலன்புரி நிலையங்களிலிருந்து இணைப்புப் பெற்றவர்களுக்குமான சம்பளம் இணைப்புப் பெற்ற கல்வி வலயங்களினூடாக வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமாகாண நலன்புரி நிலையங்களில் இருந்து மாணவர்கள் சேர்ந்தமையால் தளபாடப்பற்றாக்குறை நிலவுகின்றது.

இப்பிரச்சிளையைப் பூர்த்தி செய்து தருமாறு யாழ். அரச அதிபரிடம் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விடுத்த வேண்டுகோள்களுக்கு இணங்க இப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என அரச அதிபர் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-9-19)




## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். றோட்டறிக் கழகம், யாழ். மத்தி றோட்டறக்ட் கழகம், பலாலி ஆசிரியர் கலாசாலை ஆங்கில மன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயம் நடத்திய ஆங்கில சொல்வதெழுதல் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் யாழ். றோட்டறிக் கழக முன்னாள் தலைவர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணேசலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-4)

## தாச்சி, உதைபந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலயக் கல்வி அலுவலக விளையாட்டுக்குழு நடத்தும் தாச்சிப்போட்டி உதைபந்தாட்ட இறுதிப்போட்டி மூன்றாம் இடத்திற்கான போட்டி ஆகிய போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் வலிகாம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. மாதவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-4)

# கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான...

*(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பாவா முகைதீன் முகமட் நஸ்ரின் (கல்பிட்டி), குணசேகரம் துவாரகா (கந்தரோடை, சுன்னாகம்), குணரட்ணம் சஜீவன் (உரும்பிராய் கிழக்கு), செல்வராசா புலோரந்திபா(மல்லாகம்), நாகமுத்து ஜெயவதணன் (தெல்லிப்பழை கிழக்கு), லோகேஸ்வரன் சாதனா (கொக்குவில்), லோகேஸ்வரன் செந்தூரன்(சுதுமலை தெற்கு), ஐயாத்துரை மயூரன்(தாவடி), சற்குணநேசன் முகுந்தவேல்(ஆனந்தகுமார சுவாமி நலன்புரி நிலையம், வெங்களசெட்டிக் குளம்), சிவபாதம் தனுஷ்குமார் (கந்தர்மடம் யாழ்ப்பாணம்), சிதம்பரநாதன் ஜெயநாதன் (கரவெட்டி மத்தி),

சிவலிங்கம் பிரதீபன் (தெல் லிப்பழை), ஜெயரஞ்சன் சஞ்ஜீவ் (நல்லூர் கிழக்கு), கணபதிப்பிள்ளை சசிதரன் (திருகோணமலை), பரமசிவம் தவப்பிரியன் (பண் ணாகம் தெற்கு), செகராசா பகீரதன் (ஆனைக்கோட்டை), கனகலிங்கம் கார்த்திகா(மட்டுவில் தெற்கு), இராமசாமி ரஜீவ்ரதன்(வாரியகுளம் வடக்கு, சுன்னாகம்), அரியரட்ணம் வசீகரன் (சுதுமலை தெற்கு), இராஜசிவம் தனுஷன் (தொல்புரம்), சுதாகரன் வித்தியா (இளவாலை), ஜெயபாலன் சதீஸ் (வேலணை தெற்கு), சற்குணநாதன் கமல்ராஜ் (திருநெல்வேலி வடக்கு), கனகலிங்கம் லதீகா (அரியாலை யாழ்ப்பாணம்), திருஞான சுந்தரம் பிரதீப் (வல்வெட்டித்துறை) , இராஜதுரை கிரிசாந்தன்(கரவெட்டி), உதயகுமார் சுபாசினி ( சித்தன்கேணி), பாலச்சந்திரன் பாலரவி (யாழ்ப்பாணம்), சோமசுந்தரம் தங்கேஸ்வரன் (பருத்தித்துறை), நாகேஸ்வர சர்மா சிவ மனோகர் (சுன்னாகம்), கனகராசா தவச்செல்வம் (வல்வெட்டித்துறை), புலேந் திரன் பிருந்தா(தும்பளை, பருத்தித்துறை),

தர்மபாலன் ஜாபிரதாப் (கோண்டாவில் கிழக்கு),முகமட் தாகிர் முகமட் சிம்சார் (வெலிகம), அந்திரேஸ் செபஸ்ரின் அந்தோனி தாஸ் (மன்னார்),சந்தியோகு பிரிவசந்தி (மன்னார்), ஜகுபர் முகமட்ஜஸ்மி (ஆலங்குடா) முகமட் மஸாஹிர் நஷ்ரத்துல் அசில் (தாராபுரம்), சர்மிளா குரூஸ்எமில்ராஜ் (எமில்நகர்), பொன்னுச்சாமி கிருஷ்ணவேணி (செட்டிக்குளம்,வவுனியா),புஸ்பராசா ஜுட் ஆனந்த குமார் (யோசப்வாஸ் நகர், மன்னார்) , அப்துல்லாபீர் முகமட் நிபாத் (அரபா நகர், புத்தளம்) , சந்தியோகு நெவில் பெர்னாண்டோ (பேசாலை),ஜெகசோதி ஜெகதீசன் (எழுத்தூர்), மன்மதராசா லெப்டினன் (உப்புக்குளம் , மன்னார்), முகமட் சலீம் நளீபா பேகம் (சிலாபத்துறை, மன்னார்), பரமசிவம் ரதிதேவி (நானாட்டான் , மன்னார்), கிறேசியஸ் அனுரா டெனிசியஸ் (எமில்நகர், மன்னார்).

இராஜரட்ணம் சோபனா (தோணிக்கல், வவுனியா), அரசரட்ணம் பிரணவன் (பண்டாரிக்குளம், வவுனியா), இராசலிங்கம் பிரசாந்தினி மகாரம்பைக்குளம், வவுனியா) கந்தசாமி சாந்தகுமார் (செட்டிக்குளம், வவுனியா), திஸ்ஸ வீரசிங்கம் திசாகரன் (வலயக்கல்வி அலுவலகம், வவுனியா), சமிந்த நிரோசன் கொத்தலாவல அன்ரனி (வவுனியா), சபாரத்தினம் சாரதா (வவுனியா). நந்தசீலன் சுகன்ஜா (ரம்பைக்குளம், வவுனியா) , அப்துல் லத்தீப் முகமட் இன்சாப்( வேப்பங்குளம், வவுனியா), வேல்முருகு ஆயகுலன் (குருமன்காடு , வவுனியா), நடராஜா அகிலன் (வவுனியா)

ஐயாத்துரை சுதர்சன் (வெளிக்குளம், வவுனியா), கனகேந்திரம் உமைநேசன் (பூமாங்குளம், வவுனியா), யோசப் ஜெகதாஸ் (குடியிருப்பு, வவுனியா), சுதாகரன் தயான் (கல்வயல், சாவகச்சேரி), கமலநாதன் சுதர்சினி (நெடுங்கேணி), செல்வநாதன் அருட்குமரன் (இலுப்பைக்குளம், வவுனியா). கனகசபாபதி சுரேந்திரன் (மகாரம்பைக் குளம்), கார்த்திகேசு சவீத்தா (உக்கிளாங்குளம், வவுனியா), இலட்சுமணன் சுதன், கெங்காதரன் சதீஸ்,சொர்ணலிங்கம் சுஜீபன் (செட்டிக்குளம், வவுனியா),செல்லையா நிமலரூபன்(தோணிக்கல் , வவுனியா), பிரபாகரன் கவிதா லோரன்சியா, இராமநாதன் சுரேஸ், சுப்பையா நகுலன், கந்தசாமி உதயரூபன், குணரட்ணம் சுபாகரன் (செட்டிக்குளம் வவுனியா)

செல்வராசா ஜெயராசா (பட்டாணிச்சூர், வவுனியா) இராசையா உதயகுமார் (செட்டிக்குளம் வவுனியா), வடிவேல் ரஞ்சன் (தோணிக்கல்,வவுனியா), நிலாக்கினி சுரேஷ்குமார், செல்வராசா சுஜிவேந்தன், உதயசூரியன் ஜெயந்த பிரகாஸ் (செட்டிக்குளம் வவுனியா). கந்தசாமி பிரதீபன் (உக்குளாங்குளம் ,வவுனியா), அருணாசலம் பரமேஸ்வரன் (கோவில் புதுக்குளம்),பாலச்சந்திரன் ஜெயரஜித் (கோவில் குளம்), அழகன் மோகனகுமாரி செட்டிக் குளம்), மைக்கல் நிசாந்தினி (கன்னியா, திருகோண மலை),

மார்க்கண்டு இளநேசன் (ஆனந்த குமார சுவாமி நலன்புரி நிலையம்), கீதபொன்கலன் பேடிஜெயகரன், ஸ்ரீகரன் ஊர்மிளா, செல்வராசா விஜியதீபன், விமலேந்திரன் முகுந்தன், பெருமாள் பவளராஜ், இரத்தின சபாபதி ஜெயக் குமார் (செட்டிகுளம், வவுனியா). (ஓ-7-14)

# மஹேல இரட்டைச்சதம் விளாசல்; இலங்கை அணி முன்னிலை பெற்றது

## பந்து வீச்சாளர்கள் ஏமாற்றம்; இந்தியா பரிதாபம்

(அகமதாபாத்)

மஹேல ஜெயவர்த்தனவின் சிறப்பான இரட்டைச்சதத்தின் மூலம் இலங்கை அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5விக்கெட்டுகளையிழந்து 591 ஓட்டங்களைக்குவித்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3டெஸ்ட்,2 இருபது-20 மற்றும் 5ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 16ஆந் திகதி அகமதாபாத்தில் ஆரம்பமானது.இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையுமிழந்து 426 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுகளையிழந்து 275 ஓட்டங்களையெடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மஹேல-சமரவீர ஜோடியின் பொறுப்பான இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான நிலைக்கு முன்னேறியது.

இதில் மஹேல ஜெயவர்த்தன 86ஆவது பந்திலும், திலான் சமரவீர 97 ஆவது பந்திலும் அரைச்சதங் களைப் பூர்த்தி செய்தனர்.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 138ஓட்டங்களைப் இணைப்பாட்டமாகச் சேர்த்த போது திலான் சமரவீர 145 பந்துகளில்(9 பவுண்டரிகள் உட்பட) 70ஓட்டங்களை எடுத்து இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் யுவராஜ்சிங்கிடம்பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மத்யூஸ் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நீண்ட நேரம் நிலைக்கத் தவற இலங்கை அணி 96.2 ஓவர்களில் 375 ஓட்டங்களை எடுத்து 5 ஆவது விக்கெட்டையுமிழந்தது.



### இணைந்தனர் சகோதரர்கள்

இந்நிலையில் 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மஹேல- பிரசன்ன ஜெயவர்த்தன சகோதரர்கள் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி இலங்கை அணியை முன்னிலைப்படுத்தினர்.

இதில் மஹேல ஜெயவர்த்தனா 151 ஆவது பந்தில் தனது .. ஆவது டெஸ்ட் சதத்தைப்பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 128.5 ஓவர்களில் 500ஓட்டங்களைத் தொட்டது.

இதில் பிரசன்ன ஜெயவர்த்தன 100 ஆவது பந்தில் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.மறு முனையில் மஹேல ஜெயவர்த்தன 330ஆவது பந்தில் தனது 6ஆவது டெஸ்ட் இரட்டைச்சதத்தைக் கடந்து கலக்கினார்.


இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 5விக்கெட்டுகளையிழந்து 591ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 165ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையாகவுள்ளது.


இதில் மஹேல ஜெயவர்த்தன 339 பந்துகளில் (17பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட)204 ஓட்டங்களையும், பிரசன்ன ஜெயவர்த்தன 186 பந்துகளில் (4பவுண்டரிகள் உட்பட) 84 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.




பந்துவீச்சில் சகீர்கான், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.போட்டியின் 4ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.





இராமாவில் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 248 பேர் நேற்று அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களை ஏற்றிச் சென்ற வாகனத் தொடரணியை யாழ்.அரச அதிபர் உட்பட்ட பிரமுகர்கள் வழியனுப்பிவைப்பதனையும், குடத்தனை முகாமுக்கு மாற்றப்பட்ட மக்களுடன் அரச அதிபர் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.







புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணிமனையின் பிரதேச காரியாலய திறப்பு விழாவில் யாழ்.மேயர் மற்றும் பணிப்பாளர் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்வதையும்; யாழ்.அரச அதிபர் மற்றும் மேயர் அலுவலக கட்டிடத்தை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

# பாதுகாப்பு அனுமதி தேவையில்லை நேற்று 997 பேர் பயணமாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடாக 997 பேர் நேற்று வெளிமாவட்டங்களுக்கு பயணமானார்கள் என யாழ்.இராணுவ சிவில் அலுவலகம் தெரிவித்தது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நேற்று முதல் பயண அனுமதியின்றி வெளிமாவட்டங்களுக்கு செல்ல முடியுமென அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று 997 பேர் ஏ-9 வீதியூடாக வெளிமாவட்டங்களுக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களில் பயணமானர்கள் என யாழ்.இராணுவ சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இதில் 900க்கும் மேற்பட்ட பயணப்பாதுகாப்பு அனுமதியை வைத்திருந்தனர் எனவும் அவ் அலுவலகம் குறிப்பிட்டது.

அத்துடன் நேற்றுமுதல் யாழ்ப்பாணத்திலிருந்து செல்பவர்களிடம் ஆள்அடையாளப்படுத்தும் ஆவணத்தை பரிசோதித்து வெளிமாவட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் யாழ்.இராணுவ சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது. (ச-5)

# தொழில்நுட்ப சான்றிதழ் உள்ள பாரவூர்திகள் பயணிக்க அனுமதி

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள லொறிகள் ஏ-9 வீதியூடான சேவையில் ஈடுபடுவதற்கான தொழில்நுட்பச் சான்றுகள் பெறுவதற்கு விண்ணப்பித்தால் பெற்றுக் கொடுக்கப்படுமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தகவல் தருகை யில்,

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள லொறிகள் ஏ-9 வீதியூடாக சேவையில் ஈடுபட நேற்றுமுதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஏ-9 வீதியூடான வாகனத் தொடரணியில் இணைந்து செல்ல வேண்டும் என்பதனால் தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே ஒரு பகுதி லொறிகளுக்கு தெல்லிப்பளையில் வைத்து படையினரால் சோதனை செய்யப்பட்டு தொழில்நுட்பச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இவ்வாறு தொழில் நுட்பச்சான்றிதழ் பெற்றுக் கொண்ட லொறிகள் ஏ-9 வீதியூடாக சேவையில் ஈடுபட முடியும்.எனவே லொறிகளுக்கு இதுவரை தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாதவர்கள் விண்ணப்பித்தால் அதனைப் பெற்றுக் கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படுமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

## ஆசிரியர் வழிகாட்டி கைந்நூல்கள் 20ஆம் திகதி முதல் விநியோகம்

ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் மற்றும் மாணவர்களுக்கான இலவசப்பாடப் புத்தகங்கள் இம் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலவசப் பாடப்புத்தகங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலக மட்டத்தில் விநியோகிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தரம் 12 இல் கற்பிக்கவுள்ள ஆசிரியர்கள் அடுத்த ஆண்டுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, தயார் செய்து கொள்ள வசதியாக ஆசிரியர்வழிகாட்டிகைந்நூல்கள்வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் என அச்சிடப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டிக் கைந்நூல்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் சகல பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன. (ச-5)

## இந்திய அரசியல் சாசனத்தை ஒத்த...

உணர்ந்தும் முன்னெச்சரிக்கையாக விவேகமான முடிபை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

மேலும் அண்மையில் யுத்தம் உட்பட நடந்தேறிய சம்பவங்கள் சிறுபான்மையினரின் மனிதாபிமானப் பிரச்சினையை மேலும் அதிகரித்துள்ளமையால் அதனைத் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு ஒரே விதமான சிந்தனை கொண்ட கட்சிகளினதும் மக்களினதும் பொறுப்பு என தமிழர் விடுதலைக் கூட்டணி உணர்கின்றது.

பல்வேறு திசைகளில் இருந்து கடந்த காலத்தில் நாட்டைக் குட்டிச்சுவராக்கக் கங்கணம் கட்டுகின்ற சில கடும்போக்காளர்கள் உட்பட உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் திடீரெனத் தம்மை வெளிக்காட்டிக் கொண்டு நாட்டின் நிலைமையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சிபார்சு செய்வதும் அறிக்கைகளை விடுவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதற்குச் சில உள்நோக்கங்கள் இருப்பதைத் தெளிவாக வெளிக்காட்டுகின்றது. நாட்டின் பல்வேறு பகுதி மக்களும் ஒன்றிணைந்து நாட்டில் பூரண அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதை உணர்ந்து அதை அடைவதற்குக் குறைந்த பட்சம் ஒரு பொது நிலைப்பாட்டை சகல அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் பின்வரும் கருத்துக்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனத் தீர்மானித்து இவ் அறிக்கையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி பகிரங்கப்படுத்துகின்றது.

ஒற்றையாட்சியின் கீழ் நிரந்தர தீர்வை ஒரு போதும் அடைய முடியாது என்பதைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நம்புவதால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண்பதற்கு ஒரேயொரு மாற்றாக இந்திய அரசியல சாசனத்தை ஒத்த தீர்வே பொருத்தமானதாகும்.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் மற்றும் ஏனைய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிய அனைவரையும் அவர்கள் முன்பு வாழ்ந்த தத்தமது இடங்களில் மீள்குடியமர்த்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சகல உயிரிழப்புகளுக்கும் சொத்தழிவுகளுக்கும் முழுஅளவிலான நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

வடக்குக் கிழக்கு இணைப்புச் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பிரச்சினையை இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கமைய பொதுஜன வாக்கெடுப்பு மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

பிழையான வழியில் சென்ற முன்னாள் புலிப் போராளிகள் என முத்திரை குத்தித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறுவர்களை அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப கல்வி கற்றது வாக அவர்களை உடனடியாகப் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும். தாமாக விரும்பி அவ் இயக்கத்தில் சேர்ந்தவர்களுக்குத் தொழிற்பயிற்சிகளை வழங்கி விடுவிக்க வேண்டும்.

தற்காப்புக்கேனும் ஆயுதம் தாங்கியுள்ள முன்னாள் ஆயுதக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்கள் களையப்பட்டு அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அரசு வழங்க வேண்டும்.

அரசு மேற்கொள்ளும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் இடத்தைப் பற்றியோ, திட்டத்தின் சிறப்புப் பற்றியோ சரியாகத் தெரியாதவர்களின் கையில் அதனை ஒப்படைப்பதைத் தவிர்த்து, அப் பிரதேச வாசிகளின் ஆலோசனைகளையும் ஆதரவையும் பெற வேண்டும்.

அகதிகளை மீளக்குடியமர்த்தும் பணிகளை அந்தந்தப் பகுதி அரசாங்க அதிபர்கள், அவரின் கீழ் கடமையாற்றும் அரச ஊழியர்களிடம் ஒப்படைத்து அந்தந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளை இடைத்தங்கல் முகாம்களாகப் பாவித்து அவரவர் வீடுகளைத் திருத்தவும். குடியிருக்கப் பொருத்தமானதாக ஆக்கவும் வழிசமைத்துக் கொடுக்க வேண்டும்.

மீறுவோருக்குக் கடும் தண்டனையுடன் கூடிய ஓர் வலிமை மிக்க அடிப்படை உரிமை சாசனம் உருவாக்கப்பட வேண்டும்.

இவற்றுடன் பொருத்தமாக இணைக்கக் கூடிய ஆலோசனைகள் வழங்கப்படின் தமிழர் விடுதலைக் கூட்டணி அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்றுள்ளது. (ச)

## முன்னாள் சிறுவர் போராளி...

இரத்மலானை இந்துக் கல்லூரியில் தற்போது சுமார் 250 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஆனாலும் அவர்கள் அங்கேயும் இராணுவப் பாதுகாப்புடனேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களைச் சந்தித்துத் திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அந்தச் சிறார்களுக்குத் தனியான வகுப்பறைகளில்தான் வகுப்புக்கள் எடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு வெளியே சென்று நடமாட அனுமதியில்லை. மிகக் குறைந்த நேரமே இந்த முன்னாள் சிறார் போராளிகளுடன் பேச எங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அவர்களில் பெரும்பாலானவர்கள் தமது வீடுகளுக்கு விரைவில் செல்ல வேண்டும் என்ற மன நிலையிலேயே உள்ளனர் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அரசாங்கத் தரப்பினால் தெரிவிக்கப்பட்ட செய்திகளின்படி சுமார் 11 ஆயிரம் போராளிகள் தங்களிடமிருப்பதாகவும் அதிலே 2 ஆயிரம் பேர் பெண் போராளிகள் என்றும் சுமார் 500 பேர் சிறார் போராளிகள் என்றும் அரசு தெரிவித்துள்ளது. அதில் சுமார் 250 பேரை கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியிலேயே தங்க வைத்திருக்கின்றார்கள்.

அவர்களைச் சந்திப்பதற்காகத்தான் நேற்று நாங்கள் சென்றோம். அவர்களிடம் நாங்கள் பேசக் கூடிய வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலும் நிலைமை மட்டுப்படுத்தப்பட்டு அவசர அவசரமாக ஓரிரு வார்த்தைகள் பேசியதன் பின்னர் நாங்கள் செல்வதற்கு வற்புறுத்தப்பட்டோம்.

எங்களை எப்பொழுது விடுதலை செய்வார்கள்? நாங்கள் விடுதலை செய்யப்பட்டதன் பின்னரும் எங்களது உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமா? நாங்கள் எப்போது ஊருக்குத் திரும்பலாம்? எப்பொழுது நாங்கள் பெற்றோரைச் சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கும்? என்ற கருத்துக்கள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கக் கூடியதாக இருந்தது.

இதையொரு ஆரம்பக்கட்டமாகத்தான் பார்க்கின்றோம். அதைவிட இந்த 250 பேரை வைத்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு அரசாங்கம் 11 ஆயிரம் பேரை நாங்கள் இந்தளவிலே புனர்வாழ்வு வழங்கப் போகின்றோம் என்று காட்டுவதாகத்தான் நினைக்கின்றோம்.

இதற்குச் சரியான ஒரு கொள்கை வகுப்பு செய்யப்பட வேண்டும். மேலதிகமாக இதிலே தொடர்ச்சியாக மக்கள் பிரதிநிதிகள் அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் கேட்கப்படுவதன் ஊடாகத்தான் இதைச்சரியான திசையிலே கொண்டு செல்ல முடியும் என்று நாங்கள் கருதுகின்றோம் என்றார். (ச-3,5)

## வடமராட்சி...

குடத்தனை முகாமில் தங்க வைக்கப்படுவர்.

இதன் மூலம் இம் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதுடன் தொழில்களையும் மேற்கொள்ள முடியும். அத்துடன் இம் மக்களுக்கு உலர் உணவு நிவாரணங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என யாழ். அரச அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் மிருசுவில் நலன்புரி முகாம் மூடப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த மக்கள் இராமாவில் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

### (கற்பூர மணியம்)



காரைநகர் கருங்காலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (17.11.2009) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சிவயோகம் தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் யோகேந்திரன் (பதுளை), மங்கையற்கரசி (சுவிஸ்), இராயேஸ்வரி (கண்டி), பாலேந்திரன், தெய்வேந்திரன் (சுவிஸ்), யோகமலர் (U.K), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜினிதேவி (பதுளை), சிவராஜாசேகரம் (சுவிஸ்), செல்வராஜா (கண்டி), திருச்செல்வி, சாந்தி (சுவிஸ்), உதயகுமார் (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுசியா, அனுஜன், அஸ்வந்தினி, சிவலக்ஷன், கஜலக்சி, நிசாந்தி, டிலக்சி, சாருஜன், நதீரா, திவாகர், திவாஜினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.11.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீலகிரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருங்காலி,
காரைநகர்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(3947)

## பெற்றோல்...

நிலையங்களுக்கு இன்றுபெற்றோல் முழுமையாக விநியோகிக்கப்படும்.

எனவே யாழ்.மாவட்ட சகல பிரதேசங்க ளிலுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெற்றோல் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக மக்கள் நீண்ட வரிசையிலிருந்தே பெற்றோ லைப் பெறக் கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## யாழ்ப்பாண...

கோப்பாய், கைதடி, கைதடி சிறுவர் பரா்மரிப்பு அகதிகள் முகாம் ஆகிய முகாம்களிலிருந்த மக்கள் சொந்த இடங்க ளில் மீள்குடியேறியுள்ளனர் என பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஜனவரி...

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்த அவர் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்ந்தார். நேற்று வவுனியா வுக்குச் சென்ற கோம்ஸ் இன்று அரசியல் கட் சிகளைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-3,5)

## பொது வேட்பாளருக்கு...

ஆனால் எதிர்க்கட்சிகளின் கலந்துரையாடல்களை அரசு மோப்பம் பிடித்து வருகின்றது. பொது வேட்பாளர் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி எல்லா அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்தி வருகின்றது.

இந்தப் பேச்சுக்கள் உத்தியோகப்பற்றற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதால் கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிடமுடியாது.

எமக்கு ஆதரவான கட்சிகளை அரசு அணுகி அவர்களைத் தம்பக்கம் இழுப்பதற்காகப் பல சலுகைகளை வழங்க முன்வந்துள்ளது.

எமது நகர்வுகளை அவதானிக்கவும் சில சிறப்பு ஏற்பாடுகளை அரசு செய்துள்ளது. எனவே எமது கலந்துரையாடல்களின் விபரங்களை முழுமையாக வெளியிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)


## இயந்திர இயக்குநர்

கீழே குறிக்கப்பட்டிருக்கும் இயந்திரங்களை இயக்குவதற்கு இயக்குநர் தேவைப்படின் உடன் தொடர்பு கொள்ளவும்

T.P.: 077 9758024
077 9568273

I. GRANE
II. MOTORIZED GRADER
III. FORCLIP
IV. HYDRAULIC EXCAVATOR
V. FRONT END LOADER

(C-3743)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.